விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 16 சனிக்கிழமை (30.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஜெனிவா தீர்மானத்தை இலங்கையில் நிறைவேற்ற

# கலப்பு நீதிமன்றத்தை அமைக்க முடியும்

### கூட்டமைப்பின் செயற்பாடு வேதனை தருகின்றது நீதியரசர் விக்னேஸ்வரன் கருத்து வெளியீடு



(யாழ்ப்பாணம்) ஜெனிவா தீர்மானத்தை இலங்கையில் நிறைவேற்ற கலப்பு நீதிமன்றத்தை அமைக்கமுடியும் என நீதியரசர் விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டுள்ளார். மேலும் ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பின் செயற்பாடு வேதனை தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். 23

## 20 ஆயிரம் பட்டதாரிகள்

*2 மாதங்களுக்குள் அரச சேவையில் – ரணில்*

(கொழும்பு)

அரச சேவைக்கு மேலும் 20 ஆயிரம் பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 23

## மட்டக்களப்பில் கோரவிபத்து

### மூவர் எரிந்து பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் மூவர் தீயில் எரிந்து கோரமாக உயிரிழந்தனர். 23

## திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் உடைப்பு வழக்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார், மாந்தை சந்தியில் அமைக்கப்பட்டிருந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அலங்கார நுழைவாயில் உடைப்பு தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மன்னார்நீதவான்ரீ.சரவணராஜா குறித்த வழக்கு விசாரணையினை எதிர்வரும் யூன் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். 23

## ஐ.நாவின் குற்றச்சாட்டுகளை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும்

### ஆஸி பதில் தூதுவர் ஜோன் பிலீப்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையை இலங்கை புரிந்துகொள்ள வேண்டும் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான, அவுஸ்திரேலிய பதில் தூதுவர் ஜோன் பிலீப் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கையில் போர் முடிந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. தற்போது இலங்கை எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

இலங்கை மீது மனித உரிமைகள் பேரவையில் மிகவும் 23

## புத்தாண்டில் மின்விநியோகம் தடைப்படாது

### அமைச்சர் ரவி



(கொழும்பு)

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலங்களில் எவ்வித மின்வெட்டு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படமாட்டாது என மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி 23

### கிளிநொச்சி உணவக வழக்கு

## ஆளுநர் சுரேன் ராகவனை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(சாவகச்சேரி)

கிளிநொச்சி நகரிலுள்ள பிரபல உணவகம் தொடர்பிலான வழக்கில் எதிர்வரும் 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கு கிளிநொச்சி நீதவான் எம்.கணேசராஜா நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த உணவகத்திலிருந்து கிளிநொச்சி செயலகத்தில் நடை 23

### கடும் வெப்பம் காரணமாக

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது கடும் வெப்பம் காரணமாக மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தல்லையப்புலம், கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு இராசதுரை (வயது - 67) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் உறவினர் வீடு 24

## பௌத்தர்களும் இந்துக்களும் இணைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்

### பௌத்த மாநாட்டில் பிரதியமைச்சர் புத்திக பத்திரன



(குருமன்காடு)

பௌத்தர்களும் இந்துக்களும் இணைந்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதியமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பௌத்த மாநாட்டினையடுத்து ஊடகவியலாளர்களின் 23

இந்திய கோடீஸ்வர தொழிலதிபர் திருபாய் அம்பானியின் றிலையன்ஸ் குழுமத்தின் பொலியஸ்தர் தொழிற்சாலையில்

மலேசிய வேலைவாய்ப்பு

| | | |
|---|---|---|
| ஃபோக் லிஃப்ட் டிரைவர் Forklift Driver | 120 பேர் | 1130+OT635RM 75,895/- |
| இயந்திர தொழில்நுட்பவியலாளர் Mechanical/Instrumental Technician | 80 பேர் | 1130+OT635RM 75,895/- |
| எலெக்ட்ரீஷியன் Industrial Electrician | 80 பேர் | நேரில் பேசி தீர்மானிக்கலாம் |
| தொழிற்சாலை பணியாளர்கள் General Workers | 80 பேர் | 75,895/- |

3 வருட பணி ஒப்பந்தம் (மீள்புதுப்பிக்கத்தக்கது).
தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும்.
8 மணி + OT (மாதம் 78 மணி) / வாரம் 6 நாள் வேலை. வயதெல்லை : 18-40

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

ஏப்ரல் 8,9,10 நேரடி ஆட்சேர்ப்பு

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம். The Loverக்கு அருகே
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
077 00 38 215, 021 2219 221, 077 55 46 956
(C-5928)

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை வழங்கிய விவகாரம்

### ஜெனிவா தூதுவரை நாட்டுக்கு அழைத்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

ஜெனிவாவிலுள்ள ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ் உடனடியாக நாட்டுக்கு அழைக்கப்படவுள்ளார். அவர் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என தெரிய வருகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 40வது கூட்டத் 23

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



(C-5806)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELs

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி

எமது கல்லூரியின் ஆசிரியர் கிருபாகரன் அவர்களின் பாசமிகு மாமியார் திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 21.03.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி-5926)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சின்னத்துரை சந்திரசேனா

எமது கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர் திரு.ச.குலரத்தினா அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் சின்னத்துரை சந்திரசேனா அவர்கள் நேற்று முன்தினம் 28.03.2019 வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ கனகரத்தினம் ம.ம.வி**

(8287)


## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின்
## மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| OSLO 6 Chair + 1 Tipo | 6050/= | 5250/= |
| Cane 4 Chair + 1 Tipo | 17500/= | 14950/= |
| Mirror Cupboard | 14300/= | 11300/= |
| Library Cupboard | 16500/= | 13150/= |
| Ozone Rack | 1750/= | 1550/= |
| Wooden Bed Double | 13750/= | 9750/= |
| Sofa set 3+1+1 | 45000/= | 39000/= |
| Table mat (1year warranty) | 6250/= | 3250/= |
| Wooden Cupboard | 26000/= | 18950/= |
| Dressing Table | 7500/= | 5600/= |
| Wooden Tipo, Glass Tipo | 6750/= | 4750/= |
| Mattress 72x36 | 3650/= | 3050/= |



(8283)

**இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்குமிடையில்)**
**076 821 9418, 076 821 9416, 021 492 7791**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட இசைக்குழு கலைஞர் சங்கம் நடத்திய நிகழ்வில் பிரதம விருந்தினராக B.H.அப்துல் ஹமீட் மற்றும் அமுதன் அண்ணாமலை, முத்தழகு இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் N.சண்முகலிங்கன் ஆகியோர் சங்கானை K.P.R.நவரட்ணராஜா அவர்களுக்கு **இனிமைக்குரலோன்** என்ற விருதினை வழங்கியமைக்காக வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தருமான **ந.திரிலோகநாதன்** ஆகிய நான் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(சி-5325)





**ந.திரிலோகநாதன்**
**வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர்,**
**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்,வலிகாமம்.**

உ
சிவமயம்

## சிவபூமி அறக்கட்டளையின் ஆதரவில்
கூழாவடி, ஆனைக்கோட்டை

## அபயம் மருத்துவ சேவை நிலையம்
## ABAYAM MEDICAL CLINIC AND MEDICAL EDUCATION CENTRE

## திறப்பு விழா

**காலம் : 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 3.30 மணி**

வணக்கம்! எமது மண்ணில் வாழும் மக்களின் மருத்துவ சேவையில் தமது பங்களிப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக பிறநாடுகளில் பணியாற்றும் எம் மண் சார்ந்த வைத்திய நிபுணர்கள் சேவையாற்ற முன்வந்துள்ளனர். துறைசார் வைத்திய நிபுணர்கள் இலவசமாக இப்பணியை ஆற்றுவதற்காக மருத்துவ சேவை நிலையம் திறக்கப்படுகிறது. இவ் வைபவத்துக்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நிலம், கட்டடம் அன்பளிப்பு**
**வைத்திய கலாநிதி அம்பலவாணர் பொன்னம்பலம் குடும்பம்**
(அவுஸ்திரேலியா - சுதுமலை)

**நிகழ்ச்சி நிரல்**

தலைமை
**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர் உரை
**வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன் (லண்டன்)**

சிறப்பு விருந்தினர் உரை
**வைத்திய கலாநிதி ந.சத்தியமூர்த்தி**
(பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலை)

நன்றியுரை

(8277)

**மாலை 5.00 மணி - இலவச மருத்துவ சேவை ஆரம்பம்**

குறிப்பு: நுரையீரல் சம்பந்தமான நோயாளருக்கு மாலை 5.00 மணி முதல் 8.00 மணிவரை நுரையீரல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனைகள் நடைபெறும். நுரையீரல் சம்பந்தமான நோயாளர்கள் சமுகம் தரவும்.

**ABAYAM Foundation For Health and Education U.K**

- நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை, இலங்கை, தலைமை அலுவலகம், கோண்டாவில். 021 222 7938

உ
சிவமயம்

## தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்
## அங்குரார்ப்பண வைபவம்

மேற்படி எமது தாயகம் நம்பிக்கை நிதியத்தின் அங்குரார்ப்பண வைபவ விழா

**காலம் : 31.03.2019 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 4.00 மணிக்கு**

**பெருமாள் கோவில்**
**"ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணா மண்டபத்தில்"**

நிகழவிருப்பதால் இவ்வைபவத்தில் தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**பிரதம விருந்தினர்**
**திரு.நா.வேதநாயகன் அவர்கள்**
(யாழ். அரசாங்க அதிபர்)

அன்று பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வும், 22 பயனாளிகளுக்கு கோ தான நிகழ்வும் இடம்பெறும் என்பதனையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.


நன்றி

**செ.வீ.சிறிதரன்**
(தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம் சார்பில்)

(சி-5904)

# இந்தியாவிலிருந்து புதிய ரயில் பெட்டிகள் இறக்குமதி!





(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கப்பல் ஊடாக புதிய ரயில் பெட்டிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த ரயில் பெட்டிகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

S13 Double head 14 பெட்டிகள் கொண்ட சொகுசு ரயில் மற்றும் M11 ரயில் இயந்திரங்கள் 2 இவ்வாறு கப்பல் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை தோற்கடித்ததன் மூலம் ஆட்சி கவிழாது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இரண்டு அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் நேற்று முன்தினம் வாக்கெடுப்பில் தோல்வியடைந்தன.

இது குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம் இடம் பெற்றது.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இது குறித்து கருத்து வெளியிடும் போது, நேற்று முன்தினம் உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மன்ற அமைச்சு மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி, பெருநகர அமைச்சு ஆகியவற்றின் ஒதுக்கீடு தோல்வியடைந்தன.

இதனையடுத்து அரசாங்கம் எடுக்கும் அடுத்தகட்ட நடவடிக்கையை நாடாளுமன்றுக்கு தெளிவுபடுத்துமாறு கோரினார்.

இதற்குப் பதில் வழங்கிய சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இது குறித்து பதற்றமடைய வேண்டியதில்லை என்றும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், தோல்வியடைந்த அமைச்சுக்கான ஒதுக்கங்கள் மீள முன்வைக்கப்பட்டு பாதீட்டில் இணைக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, மீண்டும் அமைச்சரவையில் இடைக்கால ஒதுக்க





யோசனை முன்வைக்கப்பட்டு அதன் பின்னரே நாடாளுமன்றில் முன்வைக்க முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப். பதில் வழங்கிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இல்லாமல் போகின்ற தொகை 10 ரூபா மாத்திரமே என்று கூறியதுடன், நிலையியல் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தமது அரசாங்கத்திலும் ஆறுமுகன் தொண்டமானின் அமைச்சுக்களுக்கான பாதீட்டு ஒதுக்கங்கள் மீதான வாக்கெடுப்பில் தோல்வி அடைந்திருப்பதாகவும் அதன்போது சபாநாயகர் அனைத்து தரப்பையும் அழைத்து கலந்துரையாடி தீர்மானம் எடுத்திருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே அவ்வாறு முறையான செயற்பாட்டை மீறி குறுக்கு வழியில் செல்வதை தாம் எதிர்ப்பதாக மகிந்த தெரிவித்தார்.

இதற்கு பதில் வழங்கிய சபை முதல்வர், இந்த விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவரையும் இணைத்து கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதாக தெரிவித்தார். (இ-7)

# சாகும் வரை உண்ணாவிரதத்திற்கு தயாராகும் அளுத்கமகே எம்.பி.



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற குழப்பநிலை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து சிறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டால் தான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குழப்ப நிலை தொடர்பில் பாராளுமன்ற குழு அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பிலான சட்ட நடவடிக்கை எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

குறித்த சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த அழுத்கமகேயும் உள்ளடங்குவதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எங்களுக்கெதிராக வழக்கு தொடர்ந்து சிறைப்படுத்த முயற்சிக்கின்றனர். முடியுமானால் செய்து பாருங்கள். விஜயகலாவுக்கு ஒரு சட்டம், எமக்கு ஒரு சட்டம். எங்களை சிறையில் அடைத்தால் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்வேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸாருக்கு புதிய சீருடையை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள காக்கி சீருடைகளுக்குப் பதிலாக பொலிஸ் அதிகாரிகளுக்கு பொருத்தமான சீருடையொன்றை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக தான் சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலிஸார் தொடர்பில் மக்களிடையே நிலவும் எதிர்மறையான எண்ணங்களை மாற்றி தரமும் கௌரவமுமிக்க பொலிஸ் சேவை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக பொலிஸ் திணைக்களத்தினுள் மேற்கொள்ளப்படும் உள்ளார்ந்த மாற்றங்களின் மற்றுமொரு நடவடிக்கையாக எதிர்காலத்தில் பொலிஸ் சீருடையில் மாற்றம் ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி நேற்று முன்தினம் இடம்பெற்ற கொஸ்கம பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.



இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, தான் பொலிஸ் திணைக்களத்தை பொறுப்பேற்று கடந்து சென்றுள்ள சில மாதங்களுக்குள் அதன் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல உள்ளார்ந்த மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக மட்டுமன்றி சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பொதுமக்களுக்கான நலன்புரி சேவைகளை வழங்குவதிலும் பொலிஸார் நிறைவேற்றும் பணிகளை ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

நினைவுப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டார்.

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, மேல் மாகாண சபை உறுப்பினர் சுமித் விஜயமுனி சொய்சா, அவிசாவளை ஐக்கிய தேசியக் கட்சி ஒருங்கிணைப்பாளர் லெனால்ட் கருணாரத்ன உள்ளிட்ட பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதனிடையே தமது வைப்பு நிதியை மீண்டும் பெற்றுத் தருமாறு கோரி மேல் மாகாண கிராமிய வங்கி வைப்பாளர்களின் பாதுகாப்பு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு சென்ற ஜனாதிபதி, அவர்களது கோரிக்கைகளை செவிமடுத்தார்.

கொஸ்கம பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி வருகை தருவதை அறிந்து, அம்மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை ஏற்பாடு செய்து தமது கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாதாரண தர பரீட்சை- மீள் மதிப்பீட்டு விண்ணப்ப கால எல்லை அறிவிப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் வெளியான 2018 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த.சாதாரண தர பரீட்சை பெறுபேறு விடைத்தாள் மீள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது அவசியம் என்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பங்கள் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)




# ராஜஸ்தான் மீண்டும் தோல்வி

## ● சாம்சனின் சதம் வீணானது ● வோர்ணர் அதிரடியில் சன்ரைசர்ஸ் வெற்றி


சதம் அடித்த மகிழ்வில் ராஜஸ்தான் அணியின் சஞ்சு சாம்சன்

ராஜஸ்தானுக்கு எதிரான ஐ.பி. எல்., தொடர் லீக் போட்டியில் டேவிட் வோர்னர் அரைச்சதம் கடந்து கைகொடுக்க ஹைதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அபாரமாக ஆடிய சஞ்சு சாம்சன் சதம் வீணானது.

இந்தியாவில், ஐ.பி.எல்., தொடருக்கான 12வது சீசன் நடக்கிறது. ஹைதராபாத்தில் நேற்று நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரகானே துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**102 ஓட்டங்கள்**

அபாரமாக ஆடிய ராஜஸ்தான் அணியின் சஞ்சு சாம்சன் (102*). ஐ.பி.எல்., தொடரில் தனது 2வது சதமடித்தார். இதற்கு முன், 2017ல் புனேயில் நடந்த ரைசிங் புனே சுப்பர்ஜெயன்ட் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி அணிக்காக இவர் 102 ரன் எடுத்திருந்தார். இதன்மூலம் அதிக சதமடித்த வீரர்கள் பட்டியலில் பிரண்டன் மெக்கலம், கில்கிறிஸ்ட், சேவாக், முரளிவிஜய், அம்லா ஆகியோருடன் இணைந்தார்.

◆ இது, ஐ.பி.எல்., தொடர் வரலாற்றில் பதிவான 53ஆவது சதம்.

**பட்லர் ஏமாற்றம்**

ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் ரகானே, ஜோஸ் பட்லர் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. புவனேஷ்வர் குமார் வீசிய முதல் ஓவரில் ஒரு பவுண்டரி அடித்த பட்லர் (5), ரஷிட் கான் 'சுழலில்' போல்டானார். அடுத்து வந்த சஞ்சு சாம்சன், ரஷிட் கான் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி தனது ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார். தொடர்ந்து அசத்திய இவர், நதீம், சித்தார்த் கவுல் பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசி னார்.

**ரகானே அபாரம்**

மறுமுனையில் சந்தீப் சர்மா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரகானே, நதீம், விஜய் ஷங்கர் பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார். பொறுப்பாக ஆடிய ரகானே, ஐ.பி.எல்., தொடரில் தனது 27ஆவது அரைசதமடித்தார். இவர்களை பிரிக்க முடியாமல் ஹைத ராபாத் அணி பந்துவீச்சாளர்கள் திணறினர்.

**சாம்சன் அசத்தல்**

இந்நிலையில் நதீம் வீசிய 16 ஆவது ஓவரின் முதல் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரகானே (70 ரன், 49 பந்து, 3 சிக்சர், 4 பவுண்டரி), 5வது பந்தில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி 2வது விக்கெட்டுக்கு 119 ஓட்டங்கள் சேர்த்தது. அசத்தலாக ஆடிய சஞ்சு சாம்சன், புவனேஷ்வர் வீசிய 18வது ஓவரில் ஒரு சிக்சர், 4 பவுண்டரி உட்பட 24 ஓட்டங்கள் எடுத்தார். சந்தீப் சர்மா பந்தில் ஒரு சிக்சர் அடித்த சஞ்சு சாம்சன், புவனேஷ்வர் குமார் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, ஐ.பி.எல்., தொடர் அரங்கில் தனது 2ஆவது சத த்தை பதிவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய பென் ஸ்ரோக்ஸ், புவனேஷ்வர் வீசிய கடைசி ஓவரில் 3 பவுண்டரிகள் அடித்தார்.

ராஜஸ்தான் அணி 20 ஓவரில், 2 விக்கெட்டுக்கு 198 ஓட்டங்களை எடுத்தது. சஞ்சு சாம்சன் (102), பென் ஸ்ரோக்ஸ் (16) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஹைதராபாத் அணி சார்பில் ரஷிட் கான், நதீம் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

**வோர்னர் அபாரம்**

சவாலான இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு டேவிட் வோர்னர், ஜொனி பேர்ஸ்டோவ் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. குல்கர்னி வீசிய முதல் ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய வோர்னர், ஸ்ரோக்ஸ் வீசிய 5ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள் அடித்தார். அபாரமாக ஆடிய இவர், 26 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி அடித்த பேர்ஸ்டோவ், ஸ்ரேயாஸ் கோபால் பந்தில் ஒரு சிக்சர் விளாசினார். முதல் விக்கெட்டுக்காக 110 ஓட்டங்களைச் சேர்த்த போது ஸ்ரோக்ஸ் 'வேகத்தில்' வோர்னர் (69) வெளியேறினார். கோபால் பந்தில் பேர்ஸ்டோவ் (45) ஆட்டமிழந்தார்.

குல்கர்னி வீசிய 14வது ஓவரில் 2 சிக்சர் அடித்த விஜய் ஷங்கர், உனத்கட் பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். அணித் தலைவர் வில்லியம்சன் (14) நிலைக்கவில்லை. கோபால் வீசிய 16வது ஓவரில் ஷங்கர் (35), மணிஷ் பாண்டே (1) அடுத்தடுத்து ஆட்மிழந்தனர். ஆர்ச்சர் பந்தில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ரஷிட் கான் வெற்றியை உறுதி செய்தார்.

ஹைதராபாத் அணி 19 ஓவரில், 5 விக்கெட்டுக்கு 201 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. யூசுப் பதான் (16), ரஷிட் கான் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**Biology A/L**
Personal and Group Classes
2019, 2020 and 2021 A/L
Tamil and English Medium
**K.Kaleivanan** B.Sc (Hons) Spl
**T.P:077 248 9507**
The Science Corner, Jaffna.
(8289)

**RAVEENS ENGLISH MEDIUM CLASSES**
**KARAVEDDY**
**G.C.E O/L RESULTS - 2018**

| NO | NAME | RESULTS | ENG | TAM | MAT | SCI | HIS | REL | COM | ICT | E.LIT |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | R.SUJANI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 2 | R.MAATHUMAI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 3 | E.VAHINI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 4 | A.SOUMIYA | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 5 | S.MATHUSHA | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 6 | S.SANUJAN | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 7 | T.NIJANI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 8 | K.ABINAIA | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 9 | E.THULASIKA | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 10 | J.PAARKAVI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 11 | S.ABINAYA | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 12 | J.SHARMINI | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 13 | M.ABINAIYAAH | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 14 | A.AARTHTHY | 8A B | A | A | A | A | A | A | A | A | B |
| 15 | K.ANITHA | 8A B | A | A | A | A | A | A | A | A | B |
| 16 | A. VARSHAN | 8A C | A | A | A | A | A | A | A | A | C |
| 17 | S.VITHURSHANA | 7A B C | A | A | A | A | B | A | A | A | C |
| 18 | S.ABIRAM | 7A B C | A | A | A | A | A | A | B | A | C |
| 19 | R.SANKEERTHTHANA | 6A 2B C | A | A | A | A | B | A | A | B | C |
| 20 | G.SANGEETHA | 4A 3B 2C | A | A | B | C | A | A | B | B | C |
| 21 | S.ARTHANAN | 3A 3B 2C S | A | A | C | C | A | B | B | B | S |
| 22 | S.PIRANAVAN | 3A 3B 2C S | A | A | B | S | B | B | C | A | C |
| SUMMARY | | | 22 A | 22 A | 19 A 2 B 1 C | 19 A 2 C 1 S | 19 A 3 B | 20 A 2 B | 18 A 3 B 1 C | 19 A 3 B | 13 A 2 B 6 C 1 S |

☛ We have started G.C.E A/L English medium classes for above students.
☛ Hartley college has no English medium classes for A/L so far . (C-5927)
Director
TP: 0212263321 - Karaveddy P. Easwaranathan B.ScAg (Hons)Dip.in.Edu

சிவபூமி அறக்கட்டளையின் ஆதரவில்

# அபயம் மருத்துவ நிலையம் நாளை திறந்து வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையின் ஆதரவில் ஆனைக்கோட்டை கூழாவடியில் அபயம் இலவச மருத்துவமனை நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன் (லண்டன்) அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ந.சத்தியமூர்த்தியும் கலந்து கொள்வர்.

அபயம் மருத்துவ சேவைக்கான காணி, கட்டிடத்தை வைத்திய கலாநிதி அம்பலவாணர் பொன்னம்பலம் குடும்பத்தினர் (அவுஸ்திரேலியா) அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நுரையீரல் சம்பந்தப்பட்ட மருத்துவத் தேவை உடையவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை திறப்பு விழாவைத் தொடர்ந்து வைத்திய நிபுணர் க.பார்த்தீபனிடம் சிகிச்சை மற்றும் ஆலோசனை பெற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)






# வரலாற்றில் முக்கிய பொறுப்பை ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார்

## அநுநாயக்க தேரர் பாராட்டு

(கொழும்பு)

சாசனத்தின் பாதுகாப்பிற்காக வரலாற்றில் ஆட்சியாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான பொறுப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக களனி பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சங்கைக்குரிய கொடுபிடியே ராகுல அநுநாயக்க தேரர் தெரிவித்தார்.

மகாசங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக ஆக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தது அதனை நடைமுறை ரீதியான மட்டத்திற்கு கொண்டுவருவதற்காக என்றும் எமது கலாசார மற்றும் இலக்கியத்தை கட்டியெழுப்பியது தேரவாத திரிபீடகத்தின் அடிப்படையிலேயே ஆகும் என்பதால் திரிபீடகத்தை நடைமுறை மட்டத்திற்கு கொண்டு வந்து ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சி கலாசாரத்தின் பெறுமானங்களை பாதுகாப்பதற்காகும் என்றும் தேரர் மேலும் தெரிவித்தார்.

திரிபீடகத்தை உலக மரபுரிமையாக ஆக்குவதற்கு ஜனாதிபதி மற்கொண்டுள்ள முய ற்சி பற்றி நாட்டின் மகாசங்கத்தினர் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழத்துடன் இணைந்த பாளி பௌத்த பட்டப்பின் படிப்பு கற்கைகள் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத்தொகுதியின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சேறு பூசுவதன் மூலம் மின்சார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது

## -சபாநாயகர் கரு ஜெயசூரிய-

Tweets Tweets & replies Media

Karu Jayasuriya @KaruOnline · Mar 27
Current #PowerCrisis can be overcome by reaching a national consensus and committed implementation of it; not by slinging mud at each other. I look forward to the committee headed by @RavikOfficial to find a lasting solution, involving all stakeholders. @HarshadeSilvaMP

(கொழும்பு)

ஒருவர் மீது மற்றொருவர் பரஸ்பரம் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக மின்சார நெருக்கடிக்கான தீர்வைக் காணமுடியாது எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, இதற்கான தீர்வை கண்டறிந்து, ஒருமித்து அதனை நடைமுறைப்படுத்துவ்தன் ஊடாகவே இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீள முடியும் எனவும் தெரிவித்தார்.

மின்வெட்டு குறித்து அரசியல்வாதிகளுக்கு இடையிலேயே ஒருவர் மீதொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் நிலையிலேயே, சபாநாயகர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். (இ-7)

# 91 வீதமான தமிழ் மக்களுக்கு அநீதி

## நாடாளுமன்றில் சிறிநேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முழுமையாக்கப்படாமல் இருப்பதென்பது அங்கு வாழ்கின்ற 91 வீதமான தமிழ் மக்களுக்கு இழைக்கின்ற அநீதியாகவே இருக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட அமர்வில் உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுக்கான விடயதானங்கள்தொடர்பிலான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக பாரம்பரியம் விழுமியங்களை விரிவுபடுத்துவதாக இருந்தால் அரசியல் அலகுகள், நிர்வாக அலகுகள் என்பவற்றுக்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். பகிர்வு செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில், இருக்கின்ற பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கான அதிகாரங்களை மேலும் மேலும் பரவலாக்கம் செய்ய வேண்டும்.

அதேபோல் உபசெயலகங்களுக்கான அதிகாரங்களை வழங்கி முழுமையான செயலகங்களாக மாற்ற வேண்டும். அத்துடன் புதிய பிரதேச செயலகங்கள், புதிய உள்ளூராட்சி சபைகள் என்பவற்றை உருவாக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது.

குறிப்பாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம்1989ஆம்ஆண்டு காலப்பகுதியிலே உருவாக்கப்பட்டது. 1993இல் அதனை முழுமையான பிரதேச செயலகமாக மாற்றுவதற்குரிய அமைச்சரவைப் பத்திரம் கூட கொண்டுவரப்பட்டது.

இப்படியான சூழ்நிலையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முழுமையாக்கப்படாமல் இருப்பதென்பது அங்கு வாழ்கின்ற 91 வீதமான தமிழ் மக்களுக்கு இழைக்கின்ற அநீதியாகவே இருக்க முடியும்.

அத்தோடு 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கல்முனை வடக்கு பிரதேச பகுதியில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை தமிழ் மக்கள் தம்மை நீண்ட காலமாக அரசு புறக்கணித்து வருவதாக குற்றம் சாட்டி வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (இ-7)

# இராணுவத் தளபதி மகேஸுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலியானா பீ டெப்லீட்ஸ் நேற்று முன்தினம் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை சந்தித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக பொறுப்பேற்ற பின்னர், முதன்முறையாக அவர் இராணுவ தளபதியை உத்தியோகபூர்வமாக சந்தித்துள்ளார்.

இராணுவ தளபதியின் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இராணுவ தளபதியும் அமெரிக்க தூதுவரும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கில் காணி விடுவிப்பு, நல்லிணக்கம் சம்பந்தமாக இராணுவம் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (இ-7)

## இராசி பலன்

30.03.2019
பங்குனி 16, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
தசமி பின்னிரவு 5.59 மணிக்கு
உத்தராடம் மாலை 6.17 மணிவரை
சுபநேரம் 3.13 - 4.43 மணிவரை
இராகுகாலம் 9.13 - 10.43 மணிவரை

கிரகநிலை: சூரி | செவ் | ராகு | சுக், புத | சந் | சனி, கேது, குரு

சந்திராஷ்டமம்: திருவாதிரை, புனர்பூசம்

**மேடம்:** செய்தொழில் மேன்மையுண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இனிமையான நாள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வெற்றி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மகரம்:** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியான பயணமொன்று இடம்பெறலாம்.

**கும்பம்:** சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களை செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்:** நட்பு வட்டாரம் விரிவடையும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

வளவன்

# சுன்னாகம் ஐயனார் பொங்கல்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்தப் பொங்கல் விழா நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (இ)

# புரவுப் பெருமக்கள் விருது விழா


(யாழ்ப்பாணம்)
உள்நாட்டு இறைவரித்திணைக்கத்தில் வரி செலுத்தும் வட பிராந்திய எல்லைக்குட்பட்ட புரவுப் பெருமக்களுக்கான வருடா வருடம் நடத்தப்படும் விருது வழங்கும் விழா இவ் வருடம் 06.04.2019 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு இல.10,12, பூநாறி மரத்தடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் "செல்வா பலஸ்" மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே அறிவித்துள்ளார். (இ)

# மாரா சூரவதமும் குளிர்ச்சி உற்சவமும்

(யாழ்ப்பாணம்)
கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான மாரா சூர வதமும் வருடாந்த பொதுக் குளிர்ச்சி உற்சவமும் நடைபெறவுள் ளன.

இதில் நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் கீரிமலை சந்தியில் மாரா சூர வதமும் மறு நாள் முதலாம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் விசேட குளிர்ச்சி அபிஷேகமும் இடம் பெறவுள்ளன. (5)

# கனரக வாகனம் மோதி தெருமூடி மடம் சேதம்



(கரணவாய்)
மரபுரிமைச் சின்னங்களின் ஒன்றான பருத்தித்துறை தெருமூடி மடம் கனரக வாகனம் மோதியதில் சேதமடைந்துள்ளது.

இம்மாத முற் பகுதியில் கனரக வாகனம் மோதியதில் மடத்தின் கூரைப்பகுதி சேதமடைந்திருந்தது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் தெருமூடி மடத்தின் ஊடாக கனரகவாகனம் ஒன்று பயணித்த போது 150 ஆண்டுகள் பழமைவாய்ந்த புராதன சின்னங்களில் ஒன்றான பருத்தித்துறை தெருமூடி மடத்தில் உடைவு ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து தும்பளை செல்லும் பக்கமாக இரண்டு பக்கங்களிலும் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன் மறு புறத்தே இடிந்து விழும் நிலையில் தொங்கிக் கொண்டிருந்த சுவர் பொது மக்களின் பாதுகாப்பு கருதி இடித்து வீழ்த்தப்பட்டது.

அப் பகுதியை தொல்பொருட் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ. ஸ்ரீ ஆகியோர் சென்று பார்வையிட்டனர். (5-60)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)
வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். (5)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் திருவருள் மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)




# யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர் தேரடி அருகே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.யோகா உலகம் நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப் பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யோகா உலக அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் உளவளத் துணை ஆசிரியர் இக்னேசியஸ் யோகா பற்றிய விசேட கருத்துரையும், யாழ்.யோகா உலக மாணவர்கள் வழங்கும் யோகா அசைவுகளும் இடம்பெறும்.

யோகா வகுப்புக்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணிதொடக்கம் 7 மணிவரை இரு பிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும்.

இதில் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

யோகாப் பயிற்சிநெறியில் இணைய விரும்புவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமானது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடையுமாறு யாழ்.யோகா உலகத்தலைவர் எஸ்.உமாசுதன் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# வாக்கெடுப்பின் பின்னர் செய்தியாளர்களை வெளியேற்றிய பருத்தித்துறை நகரசபை

(கரணவாய்)
பருத்தித்துறை மரக்கறி சந்தை விடயம் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கச் சென்ற செய்தியாளர்களை பருத்தித்துறை நகர சபை வாக்கெடுப்பின் பின்னர் வெளியேற்றியது.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை வியாபாரிகளுக்கும் மீன் சந்தைக்கு முன்னால் மரக்கறி விற்பவர்களுக்கும் இடையிலான பிரச்சினை தொடர்பில் பருத்தித்துறை நகரசபை விசேட கூட்டம் ஒன்றை நேற்று வெள்ளிக் கிழமை ஏற்பாடு செய்தது.

இதில் தவிசாளரும் பத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர்களை அனுமதிக்க முடியாது எனக் கூற இவ் விடயத்தை வாக்கெடுப்பிற்கு தவிசாளரால் விடப்பட்டது.

இதில் செய்தியாளர்களை அனுமதிக்கலாமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நான்கு உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

செய்தியாளர்களை அனுமதிக்கக் கூடாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. உள்ளிட்ட கட்சிகளின் ஐந்து உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பி கட்சியின் ஒரு உறுப்பினர் நடுநிலை வகிக்க செய்தியாளர்களை அனுமதிக்க முடியாது என நகரசபை வெளியேற்றியது. (5-60)

# கட்டடத்துறை சார்ந்த கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையும் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டிணைவு (GIZ) நிறுவனமும் இணைந்து கட்டடத் துறைக்கு தேவைப்படும் மனித வளத்தினை வழங்குவதற்காக காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கட்டட நிர்மாண உதவியாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்), நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய தொழிற் பயிற்சி கற்கைநெறிகளை எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக 120 நாட்கள் முழுநேர கற்கைநெறிகளாக நடைபெறவுள்ளன. இப் பயிற்சி நடைபெறும் போது பயிலுநர்களுக்கான போக்குவரத்து வசதி, ஊக்குவிப்பு கொடுப்பனவும் பயிற்சி நிறைவில் NVQ சான்றிதழ், உபகரணப்பொதி மற்றும் பாரிய கட்டடத்துறை சார்ந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுத்தரப்படும்.

இதில் இணைந்து கொள்பவர்களுக்கான வயதெல்லை 18 தொடக்கம் 35 வரை ஆகும். எனவே இதில் பங்குபற்ற விரும்புவர்கள் தமது சுயவிபரக் கோவையினை "உதவிப்பணிப் பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, வீரசிங்கம் மண்டபம், இல.12/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்" (021 222 7949) என்ற முகவரிக்கு 18.04.2019 ஆம் திகதிக்கு முன்னராக தபாலிலோ அல்லது நேரடியாக அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)
யா/புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் மன்ற புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் போஷகராக த.கதிர்காமநாதன், தலைவராக கி.குகநாதன், செயலாளராக தா.கிருஷ்ணமூர்த்தி, பொருளாளராக அ.சிறிதரன், கணக்காய்வாளராக மா.தவலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும். இதில் 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (5)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையும் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டிணைவு (GIZ) நிறுவனமும் இணைந்து கட்டடத் துறை சார்ந்த கட்டட நிர்மாண உதவியாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்), நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய தொழில் பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளன. இக்கற்கை நெறிகளை கற்பிப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட துறைகளில் டிப்ளோமா அல்லது NVQ 5 சான்றிதழ் மற்றும் ஒரு வருட காலத்திற்கு மேல் இத்துறையில் செயல் முறையுடன் கூடிய கற்பித்தல் அனுபவமுள்ளவர்கள் தமது சுயவிபரக்கோவையை "உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, வீரசிங்கம் மண்டபம், இல.12/4, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்" (021 222 7949) என்ற முகவரிக்கு 18.04.2019 ஆம் திகதிக்கு முன்னராக தபாலிலோ அல்லது நேரடியாக அனுப்பி வைக்கு மாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# சுவிசேஷ ஆசீர்வாதக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
**ICMM&Church of Christ** நடத்தும் 16 ஆம் ஆண்டு நிறைவு விழா மற்றும் சுவிசேஷ ஆசீர்வாதக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவிலும் அரியாலை 418, நாவலர் வீதி **CHURCH OF CHRIST** இல் நடைபெறும்.

இதில் தவச் செய்தியாளராக சகோ.ஜான்சன் தனராஜ் (இந்தியா) கலந்து கொள்வார். (5)

# கிராம அபிவிருத்தி சங்கத்தின் சர்வதேச மகளிர்தின விழா

(குருநகர்)
வண்ணார்பண்ணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் திருமதி. உதயகுமார் மகேஸ்வரி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் திருமதி.தனலட்சுமி வில்வநாதன், யாழ்.பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. நதியா சூரியதாஸ், கௌரவ விருந்தினராக ஜே/82 கிராம உத்தியோகத்தர் திருமதி. பிரதீபா தீபன், ஜே/82 அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சிவாஜினி, ஜே/82 சமுர்த்தி உத்தியோகத்தர் ப.வசீகரன், விருந்தினராக ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் நா.சுந்தரராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (5-106)

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் காலம் கடந்த பின் த.தே.கூ.கருத்து

### மகிந்த அணி விமர்சனம்



(கொழும்பு)

காலம் கடந்த பின்னரே மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துரைக்கின்றார்கள்.

அரசாங்கத்தை வீழ்த்தி தேர்தலுக்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் பலமுறை கிடைத்தும் அதனைப் பயன்படுத்தாமல் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாத்தனர் என பாராளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டமைப்பினர் மக்களின் அடிப்படை தேர்தல் உரிமை மீறப்பட்டுள்ளது என்பது தொடர்பில் இவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு குறிப்பிடவில்லை.

மாறாக இராணுவத்தினருக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் உறுதியாகவுள்ளனர்.

தற்போது பலவீனமாக ஒரு அரசாங்கம் ஒன்று செயற்படுவதற்கு கூட்டமைப்பினரே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் அமைச்சர்களின் பிரசன்னமின்மை தொடர்பில் கூட்டமைப்பு அதிருப்தி!

அமைச்சுக்கள் மீதான விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் அமைச்சர்களின் பிரசன்னமின்மை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

இந்த விவாதத்தில் கருத்து வெளியிட்ட போதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டார்.



கிளிநொச்சியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் புனரமைப்பு செய்யப்படாமை குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து வெளியிட்டார்.

எனினும் இதற்கு விளக்கமளிப்பதற்கான அமைச்சர் சபையிலிருந்து இடைநடுவே சென்றிருந்தமை குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

அமைச்சுக்கள் மீதான விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் அமைச்சர்களின் பிரசன்னம் அவசியமானது எனவும் சிறீதரன் இதன்போது வலியுறுத்தியிருந்தார். (இ-7)

## ஹெரோயினுடன் கைதான ஈரானியர்கள் மறியலில்

தெற்கு கடற்பரப்பில் 107 கிலோ கிராம் ஹெரோயின் தொகையை படகில் கடத்திய போது கைது செய்யப்பட்ட ஒன்பது ஈரானியர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நேற்று கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் II ஆம் தர காவலர் மற்றும் II ஆம் தர புனர்வாழ்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

II ஆம் தர காவலர் பதவிக்கு

க.பொ.த(உ/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்த 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாத ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும்.

II ஆம் புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிக்கு க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்திபெற்ற 24 வயதிற்கு குறையாததும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை 29.04.2019 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்புக் கிளை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் த.பெ.இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

மேலதிக தகவல்களை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியைப் பார்க்கவும். (5-10)

## மீண்டும் வலுவடைந்த இலங்கை ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதிக்கு மேலதிகமாக கொழும்பு பங்குச் சந்தையிலும் நேற்று முன்தினம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ரூபாய் பெறுமதி வலுவடைந்த நிலையில் காணப்பட்டதாக வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொலர் ஒன்றின் விற்பனை விலை 178.12 ரூபாயாக நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

கடந்த வாரத்தில் 180 ரூபாவாக காணப்பட்ட டொலரின் பெறுமதி நேற்று முன்தினம் 178.12 ரூபாவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் -2018

**யா/ அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

சி.சஜீவன்-9ஏ, சு.திசாந்-9ஏ, ஆ.மதுசன்-9ஏ,உ.யதுசா-9ஏ, அ.அனுசாந்தன்-8ஏபி, உ.ரஜனா-8ஏபி, யோ.பானுப்பிரியா-7ஏ2பி, ப.திலக்சனா-7ஏபிசி, மோ.மருண்சியா-7ஏபிசி, பி.சிஸ்ரீஜெனனி-6ஏ3பி, பா.தனோஜன்-6ஏ3பி, அ.விதுசன்-6ஏ2பிசி, த.வினிதன்-6ஏபிஎஸ், பி.துவாரகன்-5ஏ3பிஎஸ், த.சரணியா-5ஏ2பி2சி, ஜெ.ஜெனஸ்ரிகா-5ஏ3பிசி, தே.அபர்ணன்-4ஏ4பிசி, ஜெ.மோனிக்காடிஜித்-4ஏ3பி2சி, ச.கம்சினி-4ஏ2பி3சி, ஜெ.ரஜிதரன்-3ஏ4பி2சி, பு.சங்கீத்தா-3ஏ5பிசி, நி.மதுசா-3ஏ4பிசிஎஸ், சு.கீர்த்திகா-3ஏ4பிசிஎஸ், ச.ஜஸ்மினி-3ஏ2பி3சிஎஸ்.

**கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்**

வி.கின்சிகா-8ஏபி, லோ.நிதுசா-8ஏபி, ச.அலெக்சன்-7ஏ2பி, யு.மிதுஜன்-7ஏ2பி, கே.பவித்திரன்-7ஏபிசி, சு.மதுசா-7ஏபிசி, யோ.திலக்ஷனா-7ஏபிசி, ஜ.காவ்யா-6ஏ2பிசி, க.சதுஷா-6ஏ2பிசி, கோ.டனுசியா-6ஏ2பிசி, பா.கயூரி-5ஏபிசிஎஸ், த.டிலக்ஷா-3ஏ5பிசி, சி.கம்ஷா- 3ஏ3பி3சி, ஸ்ரீ.பிரவீனா- 3ஏ2பி3சி.

**யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

ஜெ.நிக்சன்-9ஏ, ரீ.பிருந்தன்-8ஏசி, சி.லோஜன்- 7ஏபிசி, சி.சிந்துயன்-7ஏசிஎஸ், சி.சினோஜா-5ஏ3பிஎஸ், வி.விதுஜா-5ஏ2சி2எஸ், ஜெ.அருள்பிரகாஸ்- 4ஏ4பிசி, செ.பிரகாசினி-4ஏ4பிஎஸ், த.சிவதர்சினி-4ஏ3பிசி, ப.லிவின்சிகா-4ஏ2பி2சிஎஸ், த.டிசானி-4ஏபி2சி2எஸ், ர.பிதுர்சனா-3ஏ3பிசி2எஸ், கு.கென்சிகா-3ஏ3சி3எஸ், கு.சிவதர்சன்-3ஏ4பிசி.

**யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

எஸ்.லதுசிகன்-9ஏ, எஸ்.லோஜிதன்-9ஏ, எம்.கோபிதன்-9ஏ,எஸ்.அபிசன்-9ஏ, எம்.தர்மியா-9ஏ, சி.பிறின்சிகா-9ஏ, பி.வைஷாலி-9ஏ, பி.பானுயா-9ஏ, பி.கிருஷிகா-9ஏ, கே.யதுஷா-9ஏ, யு.யசிந்தன்-9ஏ, எஸ்.குகபரன்-8ஏ,ஐ.தனுசிகன்-8ஏ, கே.மதுசங்கர்-8ஏ, வி.அபர்ணன்-8ஏ, எஸ்.மாதங்கி-8ஏ, எஸ்.சுபாங்கி-8ஏ, என்.துலக்ஷி-8ஏ, எஸ்.சுகர்னா- 8ஏ, வி.கம்சிகா-8ஏ, பி.தர்மிகா- 8ஏ, ஏ.சானுஜா- 8ஏ, ஏ.சாருஜா- 8ஏ, யே.றிசானுகா-8ஏ, ஆர்.மதுஷனா-8ஏ, எஸ்.சங்கீதன்-8ஏ, யே.ஜெயமதுரா- 8ஏ, கே.கீதனன்-7ஏ, பி.சயான்-7ஏ, எல்.கோவிசாந்த்-7ஏ, பி.அஜிசாந்த்-7ஏ, எஸ்.நிவேதா- 7ஏ, வி.கேதுஷா-7ஏ, எஸ்.கதம்பவி-7ஏ, எஸ்.திலக்சன்-7ஏ, எஸ்.டினேஷன்-6ஏ, ரி.நிதர்ஷனா-6ஏ, கே.டிலஸ்ணவி-6ஏ, யே.ஜீவிகா-6ஏ, கே.வினோஜா-6ஏ, எஸ்.அபிஷா-6ஏ, வி.வேதினி-6ஏ, ஆர்.சதுஸ்ணவி-6ஏ, கே.கஜீபன்-5ஏ, ஏ.கஜராஜ்-5ஏ, பி.பிரியங்கா- 5ஏ, யே.சிநேகா- 5ஏ.

**மல்லாவி மத்திய கல்லூரி**

வி.மிதுசன்-8ஏபி, இ.சாதனா-7ஏ2பி, வி.தாரணி-7ஏபிசி, சி.மதுசன்-7ஏபிஎஸ்.

**பாலிநகர் மகா வித்தியாலயம்**

இ.நர்மதா-9ஏ

**யோகபுரம் மகா வித்தியாலயம்**

ந. பிறையினா-9ஏ

**ஒட்டுசுட்டான் மகா வித்தியாலம்**

சி.றதுசியன்-8ஏசி

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**

ர. சங்கவி- 9ஏ, ச.மதுசா-9ஏ ,சி.லக்சன்-8ஏபி ,சௌ.யதுசனா-8ஏபி ,கு.எய்லின் இசானி -8ஏபி , க.தமிழினி-8ஏபி ,ஆ.ஆர்த்தி-8ஏபி ,கு.அனித்தா-8ஏபி ,இ.யூட் திவ்யராஜா -8ஏசி ,அ.வர்சன்-8ஏசி, ர.அபிரா-7ஏ2பி ,வி.யதுசாயினி-7ஏ2பி,ச.நிவாசிகா-7ஏ2பி,ச.சாரங்கா-7ஏபிசி,க.தனுஷ்கா-6ஏ3பி,ஜெ.சதுர்ஜன்-6ஏ2பிசி,க.சதுர்ஜா-6ஏ2பிசி ,ம.கீர்த்திகா-5ஏ4பி,க.டிலக்சனா- 5ஏ3பிசி, கு.நிவேகா-5ஏ3பிசி, உ.சாலினி-5ஏ2பி2சி,க.சிவரூபன்-5ஏபி3சி ,ர.விதுசா-5ஏ2பிசிஎஸ், பா.புவிந்திரன்-4ஏ4பிசி,கு. சங்கீத்தா-4ஏ3பி2சி, பி. திவ்யா-4ஏ2பி3சி ,பி.பிரணவி-4ஏபி 4சி, சு.நிலானி-4ஏ2பி2சிஎஸ், செ.பகீரதன்-4ஏ3பிசி

**கிளி/விவேகானந்த வித்தியாலயம்**

ஜோ.நெருசா-6ஏ2சிஎஸ், அ.கம்சாயினி-5ஏ2பிசிஎஸ், த.தனோஜன்-5ஏ2பிசி, இ.திவ்வியா-6ஏபிசி, ர.டினோஜினி-3ஏ3பி2சி, லோ.யாழினி-3ஏ3பி2சிஎஸ், கு.இசைமதி-3ஏ4பிசி எஸ்.

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

எஸ்.கலைச்செல்வி-5ஏ2பி2சி,ஜெ.ஒளிவதனா-4ஏ4பிசி, எஸ்.புவிதரன்-3ஏ5பிஎஸ்,ஆர்.தமிழ்நிலா-3ஏ3பி3எஸ், ஜெ.ஜெலக்சியா-3ஏ2பி4சி

**யா/சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்**

தே.பிரியங்கன்-2ஏ2பி4சி எஸ், லி.அன்ரனி-ஏ3பி3சி 2எஸ், த. அபிஷாக்-பி3சி3எஸ், யோ.நிதர்ஷன்-பி3சி2எஸ்

**கிளிநொச்சி மத்திய கல்லூரி-9ஏ**

வே.மதுஷாயினி, த.தமிழினி, பி.அமுதினி, ச.லக்சிகா, ச.தேனுயன்

**கிளி/ புனித சென் திரேசா பெண்கள் கல்லூரி**

வி.மதிவானி-9ஏ, ந. நவனிகா-8ஏபி, வே.அகழ்விழி-7ஏ2பி, வி.கஜீபா-7ஏபிசி.

**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி (9ஏ)**

எம்.சி.எல் .எட்வேட் கெவின், தி.தவசாரனி, ந. கவிஞ்ஞா

**கிளி/பளை மத்திய கல்லூரி**

மு.குகராம்-9ஏ,பா.நிருஷனா-9ஏ, சொ.சுலக்சிகா-8ஏபி, ந. சுடரினி-7ஏபிசி.

**யா/வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி**

ஆங்கிலமொழி மூலம்

எஸ்.தக்சனா-8ஏபி,ரி. சிறிரஞ்சிதா-6ஏபி2சி, கே.சங்கவி-5ஏ4பி

தமிழ்மொழி மூலம்

வி.முகிலா-6ஏ3பி, எஸ்.சுலக்சி-6ஏ2பிசி, எஸ்.சத்விகா-5ஏ4பி, ரி.அப்சரா-5ஏ2பி2சி, இ.வர்னலோகினி-4ஏ3பி2சி, வை.விதுசா-4ஏ3பி2சி, ஜி.சுருதி-3ஏ4பி2சி, எஸ். வைஸ்ணவி-3ஏ2பி4சி, எஸ்.குமுதினி-3ஏபி5சி, பி. ஆரணி-3ஏபி3சி2எஸ், என்.மதுளா-3ஏபி2சி3எஸ், எஸ்.மதுமிதா-3ஏ6சி, என்.திவ்யா-2ஏ5பி2சி, எம்.சுஜிந்தினி-2ஏ5பி2சி, எம்.வித்தியா-2ஏ5பி 2சி, தர்மிகா-2ஏ4பி3சி, எஸ்.அகல்யா-2ஏ4பி2சி எஸ், வி.வினுயா-2ஏ4பி 2சி எஸ், ஜே.திவ்விகா-2ஏ2பி4சிஎஸ், ஆர்.சோபனா-2ஏ2பி4சிஎஸ், எம்.மதுசியா-2ஏ2பி3சி2எஸ், எஸ்.விதுனா-2ஏ2பி4சிஎஸ், பி.பாருசா-2ஏ2பி2சி3எஸ், எஸ்.ஈழவேனி-2ஏ2பி4சி, எஸ். துசாந்தி-2ஏபி5சிஎஸ், என்.விபுகா-2ஏபி4சி2எஸ், எஸ்.அல்வினா-2ஏபி3சி3எஸ், வி.அன்பரசி-2ஏபி3சி2எஸ், ஆர்.ரேகா-2ஏபி2சி3எஸ், என்.மேனகா-2ஏ4சி2எஸ், எம்.மதுசிகா-ஏ3பி5சி, கே.நிரோஜினி-ஏ2பி5சிஎஸ், ரி.நிசாந்தினி-ஏ2பி4சிஎஸ், கே.நிசாந்தினி-ஏ2பி3சி3எஸ், எம்.சங்கவி-ஏ2பி3சி3எஸ், ஆர்.தூயவாணி-ஏ2பி3சி3எஸ், எஸ்.அஜித்தா-ஏ2பி2சி4எஸ், ஆர்.பிரிந்தா-ஏபி5சி2எஸ், எஸ். அபிநயா-ஏபி5சி 2எஸ், எஸ். அபிராமி-ஏபி4சி3எஸ், எம். ஜெனுசிகா- ஏபி3சி4எஸ், எஸ். கீர்த்தனா-ஏபி3சி4எஸ், எஸ். கோகிலா-ஏபிசி4எஸ், பி.விதுர் சிகா-ஏ5சி3எஸ், ஏ.மேரின் ஜெனுசிகா-ஏ4சி4எஸ், எஸ். கஜானி-ஏ4சி3எஸ், ஆர். துஷ்யந்தி-ஏ3சி5எஸ், லை.தர்சிகா-ஏ3சி3எஸ், ஆர்.சஜினா-ஏசி 5எஸ்

**கிளி/ முக்கொம்பன் மகா வித்தியாலயம்**

ஏ. முகிலன்- 5ஏ3பிஎஸ், ர.சோபிகன்-3ஏ2பி3எஸ், ஜெ.இசைநங்கை-3ஏ3பி2சி, பே.றுக்ஷிகா-2ஏ2பி3சிஎஸ், க.கலைமதி-ஏ3பி2சி2எஸ், ம.கிருஷாந்தினி-3பி3சி2எஸ், நி.சுஜீபன்-ஏபி6சி, க.தபோஷன்-ஏபி5சிஎஸ், ரா.யேசுராஜா-2பி2சி4எஸ், செ.தமிழ்மதி-ஏ4சி2எஸ்

**யா/ கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை**

எஸ்.யதுசன்-பி5சிஎஸ், ஜே.கனிஸ்ரன்-4சி3எஸ், ஏ. நிதர்சன்-ஏபி4சி, என்.நியூமன்-3சி4எஸ், ஆர்.புகழரசு-4சி2எஸ், எம்.ரஜீவன்-பி4சி2எஸ், ஆர். ரஜீபன்- பி3சி3எஸ், வி.விதுசா-பி3சி3எஸ், எம்.டிலோஜினி-ஏ4சி2எஸ், ஆர்.இன்பருதி- 3ஏ4சிஎஸ், ஏ.ஜெனிதா-பி2சி2எஸ், ஜே.ஜெயசுதர்சினி- 3பிசி2எஸ், ஏ.கலைச்செல்வி-2ஏபி2சி3எஸ், கே.கீர்த்தனா-3சி4எஸ், ரி.தமிழிசை-2ஏ2பி2சி2எஸ், ஆர்.விதுபா-ஏ2பி3சி2எஸ், பி.விதுசா-4சி3எஸ்.

**யா/ வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்**

க.கவிநிலா-7ஏ2பி, அ.அர்ச்சனா-4ஏ5பி, ம.அன்ரன் நிமல்ராஜ்-3ஏ2பிசிஎஸ்,

**யா/ அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

வி.வேணுராஜ்-2ஏ2பி2சி3எஸ், ரி.ரஜீவன்-2ஏ4பி3சி, எஸ்.கிருசாந்தன்-3பி4சிஎஸ், கே.நிசாந்தன்-3பி4சிஎஸ், ஜெ.டினேஸ்-பி3சி3எஸ், எஸ். பானுசன்-ஏபி4சி2எஸ், ஜே.ஜமீனா-ஏபி4சிஎஸ், கே.சுவிந்தனா-2பி5சிஎஸ், வி.விமலினி- ஏ2பி6சி, கே.நிசாந்தா-2ஏ2பி2சி2எஸ், எஸ்.டனித்தா-2ஏ3பி4சி, ஜே.செந்துசாளினி-2பி4சி3எஸ்.

**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (9ஏ)**

ஜோ.பிரவிந்தன், கி. பவித்திரன்,ச.சாரங்கன்,தே. சபில்சன், பி.மதுசனா,மு. சிறிவக்சனா, ம.மாதங்கி,மோ.புகழினி, சி.நிதுர்சிகா, பா.நீருஜா,ச.டிதுசா, ந.திலக்சிகா, தே.விதாரகி,க.திசாயினி, த.சந்துஷா-8ஏபி, ச.வருணன்- 8ஏசி, பி. நிவேருஜன்-8ஏசி, லோ.நிகாரூஜன்-8ஏபி, தி.அருளினி-8ஏபி, செ.குமுதினி-8ஏசி, க. பிரம்மிகா-8ஏபி, இ.குவேந்தினி-8ஏஎஸ்,செ.நிசிந்தா-8ஏபி,மோ.ஆர்ச்சனா-7ஏ2பி, ர.சதுர்சன்-7ஏ -2பி, கோ.பிறின்சியா -7ஏ2பி, சி.விக்னேஸ் 6ஏ2பிசி, இ.ஆன்கானுஜா-6ஏ2பிசி, ஜெ.மதுரா-6ஏ2பி சி, ஜெ.யதுசன்-6ஏ3பி, சு.செந்தூர்க்குமரன்-6ஏபி2சி, த.இளங்கோவன்-5ஏ3பிசி,ந.தரணிகா-5ஏ4பி, து.துவேரகன்-5ஏ3பிசி, ஜெ.அனுசியன்-5ஏ3பிசி, ந.யாழினி-5ஏ3பிசி, சி. அபிசேகன்-5ஏ2பி2சி

**யாழ்.உடுத்துறை மகா வித்தியாலயம்**

வை.துவாரகா-9ஏ, எஸ்.சதுஷ்டிகா-3ஏபி2சி3எஸ், வை.பல்லவி-2ஏ5பி2சி, எஸ் வாண்மதி-ஏ2பி4சிஎஸ், பி.ஸ்ரீசுபா-4பி4சி எஸ், கே.றிசிகா-2பி3சி4எஸ், ஆர்.இந்துஜா-4பிசி3எஸ், வை.கிசாந்தினி-பி3சி3எஸ், எம்.றஜீபனா-பி3சி3எஸ், ரி.சங்கீதா-பி3சி3எஸ், எஸ்.விதுர்ஜன்-2சி5எஸ், கே.துவாரகன்-பி4சி2எஸ், கே.துளசிகன்-3சி3எஸ், ஆர்.தர்சன்-5சி3எஸ், எஸ்.தனுசன்-பி6சிஎஸ், ஆர்.றதுசன்-பி6சி, ஏ.கிருசிகன்-ஏ5பி2சிஎஸ், ஜெ.ஜெதுர்சன்-4சி3எஸ், ஏ.ஜனுஜன்-3சி3எஸ்.

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

அ.சந்தோஷி-9ஏ, த.விஷ்னுஜா-9ஏ, உ.நிதுஷா-9ஏ, சி.விவேகா-9ஏ, த.தயானி-8ஏபி, து.ஸ்ரீபிரியா-8ஏபி, சு.ஆனிசா-8ஏபி, ஜெ.கஜலப்பிரியா-8ஏபி, ப.தர்சிகா-8ஏபி, கு.சங்கவி-8ஏபி, கு.எழில்மதி-8ஏபி,சி. சிவப்பிரியா-8ஏபி, ச.சுவஸ்யந்தி-8ஏபி, உ.கிருஷ்ணவி-8ஏபி, சு.யதுர்சனி-8ஏபி, ச.சத்தியரூபினி-8ஏசி, வ.அக்சயா-8ஏசி, பா.டிருசிகா-7ஏ2பி, சி.அபிராமி-7ஏ2பி, அ.உமாபாரதி-7ஏ2பி, றொ.விதுர்ஷா-7ஏபிசி, அ. கிஷாளினி-7ஏ2சி, ச.டன்சியா-7ஏபி எஸ், ர.தரணியா-6ஏ3பி, செ.தக்சாயினி-6ஏபி2சி, ப.பவப் பிரகாசினி-6ஏ2பிசி,சி.சிவரஞ்சினி-6ஏ2பிசி, ப.சிந்துஜா-6ஏ2பிசி, கி.சரணியா-6ஏ2பிசி, ச.துசாரகா-6ஏ3பி, ஜெ.நிவேதிகா-6ஏ3பி, ப.லக்சிகா-5ஏ2பி2சி, ஜெ. மகாவைஷ்ணவி-5ஏ3பிசி, சி.சோனியா-5ஏ3பிசி, அ.தனுசியா-5ஏ4பி, ச.தரங்கினி-5ஏ3பிசி, ரோ.தஸ்மிகா-5ஏ3பிசி, ச.அருச்சுனா-5ஏ2பி2சி, நி.துவாரகா-5ஏ3பிசி, சு.சங்கவி-5ஏ4பி, சு.ஆத்மிகா-5ஏ3பிசி.

**யா/ வட்டு. இந்துக் கல்லூரி**

ஆங்கிலமொழி மூலம்

பா. பபசாந்- 9ஏ, சி.விதுஷன்-7ஏ2பி,வே.கஜானி-2ஏ3பி4சி

தமிழ்மொழி மூலம்

கு. சோபனா-4ஏ3பி2சி, வி.மிதுஷன்-3ஏ3பி2சிஎஸ், து.புவிதா-5ஏபி2சி, யோ. யோகநேசன்-2ஏ4பி3சி,ந. புருசோத்தமன்-2ஏ3பி3சிஎஸ்,ம.மிதிலா-2ஏ3பி2சி2எஸ்,செ.பவித்திரா-2ஏ2பி4சிஎஸ், கு. வேணுகா-2ஏ2பி3சி2எஸ்,ம.திலக்சி-2ஏ2பி2சி3எஸ்.

**யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி**

ஸ்ரீ.பிரியங்கன்-6ஏ2பிசி, அ.கபிலன்-5ஏ3பிசி, கு.அரவிந்தன்- 4ஏ5பி.

**யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**

ம.திருவரங்கன்-9ஏ, க. செந்தாளன்-8ஏபி,த.விதுசியா-7ஏபிசி, பி.மிதுசா-3ஏ2பி4சி, பா. ஆரூரன்-3ஏ4பி2சி.

**யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**

ப.சுகிர்தா-6ஏபிசிஎஸ், ப.நிலக்ஷி-3ஏ4பிசிஎஸ், சு. சிவாஜினி-3ஏ2பி3சிஎஸ், சி. அனுசன்- 2பி3சி3எஸ், ம.தர்மினி-பி2சி5எஸ்,சி.ஜீவிதா-5சி 3எஸ், க.சஞ்சீவன்- 2சி6எஸ்.

**யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை**

ஸ்ரீ.தனுசன்-ஏ6சி2எஸ்,யெ.துஷ்யந்தினி-ஏ2பி3சி2எஸ், கொ.அவைட்சனா-பி4சி3எஸ், ம.நிதுசா- பி2சி3எஸ்.

**யா/மந்துவில் றோ.க.த.க பாட்சாலை**

ஊ.திபாகர்-ஏ2பி 3சி2எஸ்,த.டென்சன்-5ஏ3பிஎஸ், ஞா. சாந்தரூபன்-ஏ3பி3சி2எஸ், த.றுமேகாந்த்-4ஏ4பிசி, த.மயூரா- பி4சி2எஸ், பி.பிரவீனா-6ஏபி2சி, த.றுமேகா-ஏபி5சி2எஸ்.

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

ஆங்கில மொழி மூலம்

த. தனுஜா- 9ஏ, சி. தேனுஜா-9ஏ, சு.சுபிலாஸ்-8ஏபி, லி.தீபிகா-7ஏ2பி,சு.டிசாந்தினி-7ஏபிசி, கி.சாகித்தியா-6ஏ3பி, யூ.விசாக்கா மிலேனியா-5ஏ3பிசி.

தமிழ்மொழி மூலம்

க. வித்தகன்- 9ஏ , சி. சிவோதயன்-9ஏ, செ.கஜநிலானி-9ஏ, பு.சங்கவி-8ஏபி, க.சோபிகா-8ஏபி, ஞா.கோபிதா-8ஏபி, அ.டிலக்சி-8ஏசி, தி. சுகிதன்-7ஏ2பி, சி.பிரதீஸ்-7ஏ2பி, உ. கம்சாயினி-7ஏ2பி, வி.பிரமிளன்-7ஏபிசி, த.சுஜிந்- 6ஏ3பி , ர.மதுமிதா-6ஏ3பி, ஜெ.லாவண்ஜா-6ஏ3பி, சி.கிருசனா-6ஏ3பி,ஜெ.அபிராமி-6ஏ3பி, பு. கரிஸ்னி- 6ஏ3பி, ஜெ.ரேகா-6ஏ2பிசி , சி. நிகிதன்-6ஏ2பி சி, உ.பிரஸ்தனா-5ஏ4பி , ச. டிலானி -5ஏ3பி சி , வே.அஜீபன்-5ஏ2பிசிஎஸ்,சி. பவித்தா 5ஏ2பிசி எஸ் , சி. அனோஜா-5ஏ2பிசி எஸ் , சி.ஜனோசிகா-5ஏபி3சி. (18 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை பிற்போடாமல் விரைவாக நடத்துங்கள்



## நிமால் சிறிபால டி சில்வா வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தலை பிற்போடாமல் விரைவாக நடத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்கும் தேவை குறிப்பிட்ட கட்சி தலைவர்களுக்கே இருக்கின்றன. மக்களுக்கு அவ்வாறான தேவையில்லை.

கட்சிக்குள் இருக்கும் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாமலே நிறைவேற்று ஜனாதிபதி முறையில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க முற்படுகின்றனர். மக்கள் அபிப்பிராயத் துக்குச் சென்றால் மக்களின் தீர்ப்பைக் கண்டுகொள்ளலாம்.

தேர்தல் பிற்படுத்தப்படுவதற்கு எங்களை குறைகூற வேண்டாம். தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்திற்கமைய நாங்கள் பிரதேச சபை தேர்தலை தொகுதி அடிப்படையில் நடத்த நடவடிக்கை எடுத்தோம்.

தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாகாணசபை முறைமை பிழையாக இருக்குமானால், இதனை நிராகரித்து அரசாங்கம் புதிய முறையொன்றை கொண்டுவந்து பாராளுமன்றத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக காலம் கடத்தி மேலும் தேர்தலைப் பிற்படுத்தாமல் விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நீராவி இயந்திரம் வெடித்து தொழிலாளி உயிரிழப்பு

(ஏறாவூர்)

அரிசி ஆலையொன்றில் கூலித் தொழிலாளியாக வேலை செய்துவந்த குடும்பஸ்தர் ஒருவர் அந்த அரிசி ஆலையின் நீராவி இயந்திரம் (ஸ்டீமர்) வெடித்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் - ஹிஸ்புல்லாஹ்நகர், மையவாடி வீதியில் வசித்து வந்த 4 பிள்ளைகளின் தந்தையான முஹம்மத் பாறூக் (வயது 55) என்பவரே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

இவர் கடந்த புதன்கிழமை 20 ஆம் திகதி சம்மாந்துறையிலுள்ள அரிசி ஆலையொன்றில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்குள்ள நீராவி இயந்திரம் எதிர்பாராத விதமாக வெடித்துச் சிதறியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (இ-7)

# இரத்தினக்கல் தீவாக மாறிய இலங்கையின் ஒரு பகுதி!

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பல நீர்த் தேக்கங்கள் வற்றிப் போயுள்ளன.

இந்நிலையில் காசல்ரீ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்தமையால் அந்தப் பகுதி கொள்ளையர்களின் இரத்தினக்கல் தீவாக மாறியுள்ளது.

இந்த நீர்த்தேக்கம் அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு சொர்க்க பூமியாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் விரைவாக வற்றி வருகின்றது. இந்நிலையில் அந்தப் பகுதிகளில் இரவு நேரங்களில் பாரியளவிலான குழிகளை தோண்டி அங்கிருக்கும் இரத்தினக்கற்களை அகழ்ந்தெடுப்பதாக தெரியவருகிறது.

இந்தக் கொள்ளையர்கள் அகழ்விற்கு செல்லும் போது பாதுகாவலர்களை ஈடுபடுத்திகொள்வதனால் அவர்கள் சட்டத்தில் சிக்குவதில்லை என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நீர்த்தேக்கத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அனுமதியற்ற இரத்தினக் கல் அகழ்வு காரணமாக பாரிய சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சு.க.அமைப்பாளர்கள் நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின், கிளிநொச்சி மாவட்டத்திற்கான அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின், கிளிநொச்சி தேர்தல் தொகுதி அமைப்பாளராக சதாசிவம் இராமநாதன், பூநகரி பிரதேச சபை உறுப்பினர் ஹஜ் முகமது ஹபீர் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற அலுவலக தொகுதியில் வைத்து, மாவட்ட அமைப்பாளர்களுக்கான உத்தியோகபூர்வ நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. (இ-7)

# அதிவேக நெடுஞ்சாலையில் இலத்திரனியல் கொடுப்பனவு அட்டை அறிமுகம்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலை வழியாகப் பயணிப்பவர்கள் கட்டணத்தை இலகுவாகச் செலுத்தும் வகையில், இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகளை (Electronic Teller Cards) விநியோகிக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்முறை மூலம் இலத்திரனியல் ரீதியாகக் கட்டணம் அறவிடப்படுவதன் காரணமாக பயணத் தாமதத்தைக் குறைக்க முடியும் என்பதோடு, கணனிமயப்படுத்தப்பட்டுள்ள இவ் அட்டையின் மூலம் அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பயணிக்கும் சாரதிகளிடம் தன்னியக்க முறையில் கட்டணம் அறவிடப்பட்டு, கட்டணம் அறவிடப்படும் பகுதியில் தன்னியக்க முறையில் கதவு திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அறிமுகப்படுத்த இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகளை வழங்கும் நடைமுறை, எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதிவரை அமுலிலிருக்கும் என்பதோடு, இந்தச் சலுகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் www.exway.rda.gov.lk எனும் முகவரியில் பதிவு செய்ய முடியும் என, வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், 1969 எனும் தொலைபேசி இலக்கம் மூலமாகத் தொடர்புகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தத் திட்டம் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக்கு மாத்திரமே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளுக்கும் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# ஆளும் கட்சி பிரதிப் பிரதம கொறடா ஆசுமாரசிங்க இராஜினாமா!

(கொழும்பு)

ஆளும் கட்சியின் பிரதிப் பிரதம கொறடா பதவியிலிருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பிரதிப் பிரதம கொறடாவான ஆசுமாரசிங்கவே தனது பதவி விலகலுக்கான கடிதத்தை பிரதமரிடம் நேற்றுக் கையளித்துள்ளார். (இ-7)

# தேசிய நல்லிணக்கப் புத்தாண்டு விழா -2019

(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துவிவகார அமைச்சும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் மற்றும் யாழ். மாவட்டச் செயலகம் ஆகிய இணைந்து 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லிணக்கப் புத்தாண்டு விழாவை யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இத்தேசிய நல்லிணக்க புத்தாண்டுவிழாவிலேபல்வேறுவிளையாட்டுக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் சில விளையாட்டுக்களை மாகாண ரீதியாகவும் நடத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் கீழ்வரும் விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள வீர, வீராங்கனைகள் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் பங்குபற்ற முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

1. சைக்கிள் ஓட்டம் –ஆண்கள் 80 கிலோமீற்றர்

2. சைக்கிள் ஓட்டம்-பெண்கள் 40 கிலோமீற்றர்.

3. மரதன் ஓட்டம் – ஆண்கள் 20 கிலோமீற்றர்

4. மரதன் ஓட்டம் – பெண்கள் 10 கிலோ மீற்றர்.

சைக்கிள் ஓட்டம்-
ஆண்கள் மற்றும் பெண்கள்

1. சைக்கிள் ஓட்டம் வழமையான விளையாட்டு விதிமுறைகளுக்கு அமைய நடைபெறும்.

2. பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 17 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும்.

3. தங்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வகையில் கிராம சேவையாளரின் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

4. பங்குபற்ற ஆர்வம் உள்ளவர்கள் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இல, பிறந்த திகதி, முகவரி, தொடர்பிலக்கம், மேலங்கியின் அளவு(S/M/L/XL) போன்றவற்றினை உள்ளடக்கிய சுயவிபரத்தினை தயாரித்து அனுப்பவும் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

5. போட்டியாளர்கள் விபரங்களை 2019.04.05 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் சமர்ப்பிக்க முடியும் அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும் முடியும்.

6. ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம்(சென்று திரும்பும் மொத்த தூரம் –80 கிலோமீற்றர்) யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதி வழியாக பளை வரை மீள யாழ்ப்பாணம் வந்தடைதல்.

7. பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் (சென்று திரும்பும் மொத்த தூரம் –40 கிலோமீற்றர்) யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதி வழியாக கொடிகாமம் வரை சென்று மீள யாழ்ப்பாணம் வந்தடைதல்.

8. போட்டிகளுக்கான பதிவுகளும் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கலும் 2019.04.09 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து நடைபெறும்.

குறிப்பு:

1. போட்டியாளர்களுக்கான மேலங்கியின் அளவு குறிப்பிட்டவர்களுக்கு மாத்திரம் மேலங்கி வழங்கப்படும்.

2. முன்னரே பதிவு செய்யாதவருக்கு மேலங்கி வழங்கப்படமாட்டாது.

3. சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுவர்கள் மற்றும் நிறைவு செய்பவர்கள் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

4. சைக்கிள் ஓட்ட மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் அனைத்து வீரர்களும் இரண்டு வாரங்களுக்கு உட்பட்ட மருத்துவச் சான்றிதழ் மற்றும் ECG அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் மற்றும் ECG அறிக்கைகளை போட்டி நடைபெறும் தினத்தன்று சமர்ப்பிக்காதவர்கள் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தொடர்புகளுக்கு:

1. தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர், நிர்வாகக் கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (075 053 9415/ 021 222 2233-நீடிப்பு 11)

2. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், விளையாட்டுப் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (077 742 6924/ 077 664 8996) என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## யானைத் தந்தங்களுடன் ஒருவர் வவுனியாவில் கைது

வவுனியா ஓமந்தை பகுதியில் இரண்டுயானை தந்தங்களை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை மாங்குளம் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இதனை தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் யானை தந்தங்களை ஒருவர் கைவசம் வைத்திருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஓமந்தை பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் இரண்டு தந்தங்களை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட தந்தங்கள் வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (7-250)

# மடுத் திருத்தலத்திற்கு ரவி திடீர் விஜயம்

(மன்னார்)

மன்னார் மடுத் திருத்தலத்திற்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

விசேட வானூர்தி மூலம் மடுத் திருத்தலத்திற்குச் சென்ற அமைச்சர் விசேட வழிபாட்டில் ஈடுபட்டார். அதனைத்தொடர்ந்து மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பொப்பி சோசை அடிகளார், மன்னார் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் மற்றும் அருட்தந்தையர்களை சந்தித்து உரையாடியுள்ளார்.




இதன்போது மடு திருத்தலத்தின் பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக மடுத் திருத்தலத்திற்கான வீதி மின் விளக்குகள் பொருத்துதல், மடுத் திருத்தல பகுதியில் எதிர்வரும் காலங்களில் சூரிய மின்சக்தியூடாக மின் வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-285)

# வடமாகாண பௌத்த மாநாடு வவுனியாவில் ஆரம்பம்



(குருமன்காடு)

வடக்கில் முதல் பௌத்த மாநாடு ஆரம்பம் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனின் வழிகாட்டலில் வடமாகாண பௌத்த மாநாடு வவுனியா ஸ்ரீ போதி தட்சிணாராம விகாரையில் இடம் பெற்றுள்ளது.



இந்த மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் சமய வழிபாடுகளுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், அதனைத்தொடர்ந்து பல்வேறு கலாசார நிகழ்வுகளுடனான மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதம சங்கைக்குரிய நாயக்கர், வவுனியா மாவட்ட தலைவர் பூஜ்ஜிய சியம்பலாகஸ்வெள விமலசார தேரர், புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா மற்றும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரின் தலைமையில் இந்த பௌத்த மாநாடு இடம்பெற்றுள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக நடத்தப்படும் இந்த பௌத்த மாநாடு, வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் கீழான புத்த சாசன அமைச்சு, பிரதேச அரசியல் தலைவர்கள், முப்படையினர் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பூரண பங்களிப்புடன் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-250)

# சூரியசக்தி மூலமான விவசாயம் வெற்றியளிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவின் மாங்குளம், முள்ளியவளை, பூதன்வயல் உள்ளிட்ட கிராமங்களில் விவசாய செய்கைகளுக்கு சூரியசக்தி பயன்படுத்தப்படுகிறது.

இங்குள்ள தோட்டங்களில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறப்பட்டு நீர் பம்பிகளை இயக்கி நீர் இறைக்கும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. 370,000 ரூபா செலவிலான இந்தத் திட்டத்திற்கு அரைவாசி கட்டணமாகிய 185,000 ரூபாவினை விவசாயத்திணைக்களம் செலுத்துகின்றது.

எஞ்சிய தொகையை தவணை முறையில் விவசாயிகள் செலுத்த வேண்டியுள்ளது.

சூரியசக்தியை பயன்படுத்துவதால் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.,

முதற்கட்டமாக 10 பேருக்கு இந்தத் திட்டம் வழங்கப்பட்டதாகவும் இதனை விஸ்தரிக்கவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் உ. குகநாதன் குறிப்பிட்டார்.

மின்சாரத்திற்காக விவசாயிகள் ஆரம்பத்தில் அதிகக் கட்டணத்தினை செலுத்தியதாகவும் 10,000 ரூபா வரை செலவிட்டதாகவும் குறிப்பிட்ட உ. குகநாதன், தற்போது அவர்கள் ஒரு சதம் கூட மின் கட்டணம் இல்லாது வருமானத்தினை ஈட்டுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். (7-281)




# எமக்குரிய அதிகாரங்களை வழங்க அரசு பயப்படுகின்றது

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் தெரிவிப்பு



எமக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு பயப்படுகின்றது என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

இயக்கச்சி பனிக்கையடி கணபதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா பாடசாலையின் தலைமை ஆசிரியரின் நெறிப்படுத்தலில் பிற்பகல் இர ண்டு மணிக்கு ஆரம்பமாகியது. இங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்குரிய அதிகாரங்களை வ...கினால் தங்களை விட நாம் முன்னேறிவிடுவோம் என்கின்ற பயம் இலங்கையின் ஆட்சியாளர்களிடம் காலம் காலமாக காணப்படுகின்றது இவர்கள் முடிந்தால் எங்களுக்குரிய அதிகாரங்களை தந்து பார்க்கட்டும் நாங்களும் இந்த உலகத்தில் உதாரணமான ஒரு இனமாக அனைத்து துறைகளிலும் முன்னேறி காட்டுவோம். அத்துடன் நாங்களும் உலக பந்தில் நாகரிகம் மிக்க ஒரு இனக்குழுமமாக மிளிர்வோம் எனக் குறிப்பிட்டார்.



இந்நிகழ்விற்கு பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உறுப்பினர் ரமேஷ், இயக்கச்சி சி.சி.த.க பாடசாலை அதிபர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள், பெற்றோர் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7)

## கிளி.அன்னை சாரதா வித்தியாலய வீதிக்கான அடிக்கல் நாட்டு விழா



(கரைச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் சிபாரிசில் நடைபெற்றுவரும் ஊரெழுச்சி வேலைத் திட்டங்களில் கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள கிளிநொச்சி அன்னை சாரதா வித்தியாலய வீதிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தவிசாளர், பாடசாலை முதல்வர், அக்கிராம அமைப் புகளின் பிரதிநிதிகள் , தமிழரசுக் கட்சியின் மாவட்ட செயலாளர் விஜயன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (7)

# பிரபாகரனின் வழியைப் பின்பற்றி நாம் தேர்தலில் நிற்கின்றோம்

## சீமான் முழக்கம்



(ஒசூர்)

"பாதையை தேடாதே பாதையை உருவாக்கு" என்பதை கற்பித்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் புரட்சி மொழிக்கேற்ப குறுகிய பாதையை வகுத்து வந்து நிற்கின்றோமென நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

ஒசூரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சீமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"வியர்வை சிந்தி உழைத்தாலும் இலவசமாக அரிசி வழங்கினால் தான் தங்களது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியுமென்ற வறுமை சூழ்நிலையை உருவாக்கியவர்கள் யாரென்பதை மக்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

தலைவர் பிரபாகரனின் புரட்சி மொழியை பின்பற்றியே எமது கட்சி இயங்குகின்றது. புரட்சி என்பது ஒரு தலைகீழ் மாற்றமாகும். இந்தப் புரட்சியின் ஊடாக இன்று ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் பாதாளத்தில் விரைவில் தூக்கி வீசப்பட்டு, துன்பத்திலுள்ள இளைஞர்கள் உயர் பதவிகளில் அமர்த்தப்படுவார்கள்.

இவ்வாறான உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம். கல்வி, பொருளாதாரம், வைத்தியம் ஆகிய வற்றில் புதிய கொள்கைகளை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்தியாவை ஊழல், கொலை மற்றும் கொள்ளையற்ற நாடாக மாற்றிவிட முடியாதா? என்ற எண்ணத்திலுள்ள இளைய தலைமுறையினரை நம்பியே நாம் உள்ளோம்.

ஏனைய கட்சிகள் தங்களது வாக்குகளுக்காக பணத்தை கொடுக்கின்றார்கள். ஆனால் நாம் சிறந்த கருத்துக்களை மக்களுக்காக வழங்குகின்றோம். ஆகையால், இவ்விடயங்கள் அனைத்தையும் கருத்திற்கொண்டு மக்கள் செயலாற்ற வேண்டும்" என சீமான் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி ஆணையாளரால் தீர்க்கப்பட்டது பரு.நகரசபை மரக்கறிச் சந்தை பிரச்சினை

(கரணவாய்)

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை நேற்று வெள்ளிக்கிழமை மூன்றாவது நாளாகவும் மூடப்பட்டிருந்தது.

மீன் சந்தைக்கு முன்னால் மரக்கறி விற்பனை செய்வதை நிறுத்தினால் மரக்கறி சந்தைக்கான நில வாடகை தருவோமென வியாபாரிகள் தெரிவித்ததையடுத்து கடந்த புதன்கிழமை பருததித்துறை நகரசபை மரக்கறி சந்தையை அதிகாலை திறக்க வில்லை.

இதனால் வியாயாரிகள் தமது வியாபார நடவடிக்கையை நிறுத்தியிருந்ததனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநரை சந்திப்பதற்காக வியாபாரிகள் சென்ற நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்தைக்கு நேரடியாகச் சென்ற உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வியாபாரிகளுடன் கலந்துரையாடி இறுதியில் மரக்கறி சந்தையில் இருந்து 500 மற்றர் தூரத்திற்குள் மரக்கறி விற்க முடியாது எனவும் மீன் சந்தைக்கு முன்னால் மரக்கறி விற்பனை செய்பவர்களும் பருத்தித்துறை நவீன சந்தையின் மேல் தளத்தில் உள்ள மரக்கறிச் சந்தையில் வியாபாரம் செய்யலாம் எனக் கூறிவிட்டு சென்றுள்ளார்.

மூன்று நாட்களாக இருந்த மரக்கறிகள் பழுதடைத்துள்ளமையால் நேற்று மரக்கறி வியாபாரம் நடைபெறவில்லை.

மீன் சந்தைக்கு முன்னால் மரக்கறி விற்பனை செய்தவர்களும் மேல் தளத்திற்கு வந்தால் இன்று சனிக்கிழமையிலிருந்து மரக்கறிச் சந்தை வழமைபோல் இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-60)

# ஜெனிவா பிரேரணை குறித்து ஆஸி தமிழ் காங்கிரஸ் அதிருப்தி

(சிட்னி)

ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் கடந்த 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை அதிருப்தியளிப்பதாக, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் இவ்வாறு ஒரே மாதிரியான 7 பிரேரணைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

எனினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த அளவான நீதியே கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்று அந்த அமைப்பின் பேச்சாளர் சாம்பரி தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 21ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரணை, இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் உதவும் வகையிலேயே அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# காட்டிக் கொடுத்தவர்களை கைது செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கவும் மைத்திரியிடம் எஸ்.பி.கோரிக்கை

(கொழும்பு)


ஜெனிவாவில் இலங்கையை காட்டிக்கொடுத்தவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

"ஜெனிவாவில் நாட்டைக் காட்டிக்கொடுத்தமைக்காக, நல்லிணக்க பொறிமுறை செயலகத்தின் செயலாளர் மனோ தித்தவல, அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரை கைது செய்ய வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# முதலமைச்சர் மற்றும் சகாக்களை சிறையில் அடைத்த ஜனாதிபதி



(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் சகாக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறையில் அடைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவபிரிய மற்றும் மாகாண சபை உறுப்பினர் சுமித் விஜிதமுனி சொய்சா ஆகியோரை ஜனாதிபதி சிறையில் அடைத்துள்ளார்.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் ஜனாதிபதி கொஸ்கம சிறைச்சாலையில் அடைத்துள்ளார்.

கொஸ்கமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை திறந்து வைக்கும் போது இந்த விநோத சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த இரு அரசியல் வாதிகளையும் நகைச்சுவைக்காக ஜனாதிபதி சிறைச்சாலையில் அடைத்து பார்த்துள்ளார். இது தொடர்பான புகைப் படங்கள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. (இ-7)

# இம்ரானுடன் கைது செய்யப்பட்ட ஜங்க, சம்பத் விளக்கமறியலில்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான கஞ்சிபான இம்ரானுடன் கைது செய்யப்பட்ட அனுஷ்க கௌஷால் (ஜங்க) மற்றும் அமில சம்பத் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனுஷ்க கௌஷால் (ஜங்க) எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரையும் அமில சம்பத் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ-7)

# மின்சார நெருக்கடி ஒழுங்கமைக்கப்பட்ட சதியின் விளைவாகும்

## மகிந்தானந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு பூராகவும் மேற்கொள்ளப்படும் மின்சார துண்டிப்பு மற்றும் மின்சார நெருக்கடி ஒழுங்கமைக்கப்பட்ட சதியின் விளைவாகும் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.




நேற்று நாடாளுமன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பின் 14 ஆவது நாள் விவாதத்தின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## லொறி - பஸ் மோதல் 8பேர் பலி; 30பேர் காயம்



(நொய்டா)
உத்தரபிரதேசத்தின் நொய்டாவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 30 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றைய தினம் உத்தர பிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் யமுனா விரைவுச்சாலையில் லொறி மீது பயணிகள் பஸ் மோதியமையினாலேயே மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

இதனால் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், 30 பேர் படுகாயம் அடைந்தவர்கள், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

## இந்தியா கூறிய 22 இடங்களில் தீவிரவாத முகாம்கள் எதுவுமில்லை

### பாகிஸ்தான் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் 22 இடங்களில் பயங்கரவாதிகளின் முகாம்கள் இருப்பதாக இந்தியா கூறியதை போல், எவ்வித தடயமும் இல்லை என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

காஷ்மீர் மாநிலத்தின் தெற்கு பகுதியில் உள்ள புல்வாமா மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி, பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் துணை இராணுவ வீரர்கள் 40 பேர் வீர மரணம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றதாக கூறப்பட்ட நிலையில், இந்தியா சில ஆதாரங்களை, பாகிஸ்தான் அரசிற்கு சமர்ப்பித்தது. இந்த கோப்புகளை ஆராய்ந்த பின்னர் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

புல்வாமா தாக்குதலுக்கு காரணமான பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத அமைப்பு குறித்து, இந்தியா 6 பகுதிகளாக 91 பக்கங்கள் உடைய ஆவணங்களை சமர்ப்பித்தது. இந்த ஆவணத் தொகுப்பில் பாகிஸ்தான் மீதான பொதுவான குற்றச்சாட்டுகள் பல உள்ளன. முற்றிலும் பாராமல், புல்வாமா தாக்குதல் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் மட்டும் தனியே எடுத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவற்றில் பாகிஸ்தானில் 22 இடங்களில் பயங்கரவாதிகள் முகாமிட்டு செயற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இடங்களில் எவ்வித முகாம்களும் இல்லை. இந்தியா இந்த இடங்களை பார்வையிட விரும்பினால், பாகிஸ்தான் அரசு அனுமதிக்க தயாராக உள்ளது.

மேலும் இந்த தாக்குதலில் தொடர்புள்ளதாக கூறப்பட்ட 54 பேரிடம் தனித்தனியே விசாரணை நடத்தப்பட்டது. இதில் அவர்களுக்கும் புல்வாமா தாக்குதலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தெரிய வந்துள்ளது. இந்த விபரங்களை விசாரணை மேற்கொண்ட அதிகாரிகள் தெளிவாக கூறுகின்றனர் என அதில் கூறப்பட்டுள்ளது. (7)

## அமைச்சர்களில் 33 வீதமானோருக்கு எதிராக குற்றவியல் வழக்குகள்-ஆய்வறிக்கை

(டில்லி)
மக்களவையில் தற்போது கடமையில் இருக்கும் 521 அமைச்சர்களில் 83 வீதமானோர் கோடீஸ்வரர்கள் எனவும், 33 சதவீதமானோரின் பெயரில் குற்றவியல் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தன்னார்வ அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் என்ற தன்னார்வ அமைப்பொன்று மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி குறித்த அறிக்கையில், மக்களவையின் 521 அமைச்சர்களில் 430 பேர் கோடீஸ்வரர்கள். இவர்களில் 227 பேர் பா.ஜ.கவை சேர்ந்தவர்கள், 37 பேர் காங்கிரஸை சேர்ந்தவர்கள், 29 பேர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். எஞ்சியவர்கள் பிற கட்சிகளை சேர்ந்தவர்களாவர்.

மேலும் தற்போதைய அமைச்சர்களின் சராசரி சொத்து மதிப்பு 14.72 கோடியாக காணப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்முறை இடம்பெறவுள்ள மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து மதிப்பு, அவர்களின் பெயரிலுள்ள குற்றங்கள் குறித்த பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்யவேண்டுமென தேர்தல் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஹெலிகொப்டர் விபத்து; 13 பேர் உயிரிழப்பு

(அஸ்தானா)
கஜகஸ்தானில் ஏற்பட்ட இராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருவதோடு, விபத்து தொடர்பான காரணங்களையும் கண்டறியும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



## கௌதமாலாவில் 30 பேர் உடல் ந

### 17 பேர் படுகாயம் 3 நாட்கள் துக்கம் அ

(கௌதமாலா சிட்டி)
**கௌதமாலா நாட்டில் நகராட்சி அலுவலகம் அருகே திரண்டிருந்த மக்கள் கூட்டத்திற்குள் லொறி புகுந்து நசுக்கியதில், 30 பேர் பலியாகியுள்ளனர். 17 பேர் படுகாயமடைந்தனர்.**

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவிலுள்ள நகு வாலா பகுதியில், நேற்று முன்தினம் இரவு அதிவேகமாக வந்த லொறி ஒன்று திடீரென சாரதியின் கட்டுப்பாட்டினை இழந்து மக்கள் கூட்டத்தில் புகுந்தது. நகராட்சி அலுவலகம் அருகே இந்த விபத்து நடந்தது. லொறியில் சிக்கிய பலர் உடல் உறுப்புகள் சிதைந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் சரிந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் சுமார் 30 பேர் பலியாகினர். இந்த துயர சம்பவத்தில் 17 பேர் படுகாயமுற்றனர். உடனடியாக அவர்களை அருகிலிருந்த வைத்தியசாலை

## டாக்காவில் கட்ட உயிரிழப்பு 20

(டாக்கா)
பங்களாதேஷின் டாக்காவில் உயர் மாடிக் கட்டடமொன்றில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக அதில் சிக்கி 20 பேர் வரை உயிரிழந்திருப்பதாக பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தின் போது மூச்சுத் திணறல் மற்றும் எரிகாயங்கள் காரணமாகவே இந்த அளவிற்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் மேலும் 70 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். (7)



## விமான நிலையக் கட்டுப்ப

### விமானங்கள் தரையிறக்கம்

(சிட்னி)
சிட்னி விமான நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டு கோபுரத்தில் புகை வந்ததால், அங்கிருந்து புறப்படும் அனைத்து விமானங்களும் திடீரென தரையிறக்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவில் எப்போதும் பரபரப்பாக காணப்படும் சிட்னி விமான நிலையத்தில் நேற்றுக் காலை, கட்டுப்பாட்டு கோபுரத்தில் இருந்து திடீரென புகை வந்தது. இதையடுத்து அங்கிருந்த ஊழியர்கள் அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். கட்டுப்பாட்டு கோபுரத்தின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்

# வெளிநாடு

# ல் கோரவிபத்து

# நசுங்கிப் பலி!

## அனுஷ்டிப்பு

இந்த விபத்தில் 30 பேர் பரிதாபமாக உயிரி ழந்துள்ளனர்.

இவர்களின் குடும்பங்களுக்கு நாங்கள் தேவையான உதவிகள் செய்து கொண்டிருக்கிறோம். உயிரிழந்தவர்களின்



க்குக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கௌதமாலாவின் ஜனாதிபதி ஜிம்மி மொரால்ஸ் தனது டுவிட்டர் பக்கத்தில், 'இந்த கோர சம்பவத்தை நினைத்து மிகவும் வருந்தினேன். குடும்பங்களுக்கு என் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்' என பதிவிட்டுள்ளார்.

இவ்விபத்திற்கு 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என கௌதமாலா அரசு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (7)

# முஸ்லிம்கள் மீதான சீனாவின் நடவடிக்கைகள் வெட்கக்கேடான செயல் - அமெரிக்கா கவலை

(வோஷிங்டன்)

முஸ்லிம்கள் மீதான சீனாவின் நடவடிக்கைகள் வெட்கக்கேடான செயல் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார்.

சீன சிறைகளில் அந்த நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்களுக்கு எதிராக கொடுமைகள் நிகழ்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் சீன அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் சித்திரவதைகளை அனுபவித்த யுதர் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த முன்னாள சிறைவாசி ஒருவரை மைக் போம்பியோ சந்தித்தார்.




இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான சீனாவின் அடக்குமுறைகளை அவர் விமர்சித்திருக்கிறார்.

இதுகுறித்து மைக் போம்பியோ தனது டுவிட்டர் பக்கத்தில், "சீனா அதன் சொந்த நாட்டில் லட்சக்கணக்கான முஸ்லிம்களை துன்புறுத்திக் கொண்டு மறுபக்கத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் தீவிரவாத இயக்கங்களை அவற்றின் மேல் விழும் தடைகளிலிருந்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

சீன அரசு தன்னிச்சையாக கைது செய்துள்ள சிறுபான்மை மக்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் மீதான சீனாவின் நடவடிக்கைகள் வெட்கக்கேடான செயல். சீனாவின் ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

# மிக நீண்ட உவர்க்குகை இஸ்ரேலில் கண்டுபிடிப்பு





(ஜெருசலேம்)

இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகநீண்ட உவர்க் குகையைக் கண்டுபிடித்துள்ளனர். கவனிப்பாறாக் காணப்பட்ட இந்த மல்ஹம் குகையானது 6.2 மைல் நீளம் கொண்டது. இஸ்ரேலின் மிகப்பெரிய மலைத்தொடரான சோடோமின் வழியாக சாக்கடல் நோக்கி இந்த உவர்க் குகை செல்கின்றது.

குன்றின் மேற்பரப்பில் மழைநீர் விழுந்து பாறையின் விரிசல் ஊடாகச் செல்லும் நீர் குகைக்குள் வழியும்போது உப்பாக மாறுகின்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். (7)

# அரச சேவையில் ஈடுபட கெய்டோவிற்கு தடை

(கராகஸ்)

அரசாங்க அல்லது பொது சேவைகளில் ஈடுபடுவதற்கு வெனிசுவெலா எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோவிற்கு 15 ஆண்டு கால தடை விதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச நிதி கட்டுப்பாட்டாளரும், ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவின் நெருங்கிய நண்பரான எல்விட் அமரோசோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை இதனை அறிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் தனிப்பட்ட நிதி அறிக்கைகளில் முரண்பாடுகள் காணப்படுவதாக தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


தேசிய சட்டமன்றத் தலைவராக விளங்கும் கெய்டோ, தனது பதவிக்கால நிறைவில் மீண்டும் தேர்தலில் போட்டியிட தீர்மானித்தால் இத்தடை அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது குறித்து தீர்மானிக்க அமரோசோ கணக்காய்வாளர் நாயகம் அல்ல எனத் தெரிவித்து இவ்வறிவிப்பை கெய்டோ நிராகரித்துள்ளார்.

சட்டபூர்வமான காங்கிரஸிற்கே கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கான அங்கீகாரம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். அத்துடன், ஜனாதி பதி மதுரோவை பதவி நீக்குவதற்கான தமது பிரசாரம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

# ட்டடமொன்றில் தீ

# 0 ஆக உயர்வு



# ப்பாடு கோபுரத்தில் திடீரெனப் புகை வெளியேற்றம்



டது. விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு கோபுரத்தின் பணிகள், மெல்பேர்னில் உள்ள கட்டுப்பாட்டு மையத்திற்கு மாற்றப்பட்டது.

விமான நிலையத்தில் இருந்து புறப்படவேண்டிய அனைத்து விமானங்களும் தரையிறக்கப்பட்டன. வெளியில் இருந்து வந்த விமானங்களும் தரையிறங்க அனுமதிக்கப்படவில்லை. சிட்னி வந்த விமானங்கள் கான்பெரா மற்றும் மெல்பேர்னுக்கு திருப்பி விடப்பட்டன.

தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் கோபுரத்தில் ஏறி புகை வந்த பகுதியை சோதனை செய்தனர். அப்போது கணனி பற்றரி பக் அப் சிஸ்டத்தில் அதிக வெப்பம் காரணமாக புகை வெளியானது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் காபனீரொட்சைட்டைப் பயன்படுத்தி பற்றரி குளிர்விக்கப்பட்டது. உடனடியாக புகை கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்டதால் மிகப்பெரிய தீ விபத்து தவிர்க்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு கோபுரம் செயற்பாட்டுக்கு வந்தது. ஊழியர்கள் அனைவரும் அங்கு பணிக்குத் திரும்பியதும், அனைத்து கணனிகளையும் இயக்கி சோதனை செய்தனர். அதன்பின்னர் 1.30 மணிக்கு அனைத்து விமானங்களும் வழக்கம்போல் இயக்கப்பட்டன. (7)

# கல்முனை வடக்கு தமிழ் பிரதேசத்துக்காக 224 எம்.பிக்களும் குரல் கொடுக்க வேண்டும்

## கோடீஸ்வரன் கோரிக்கை



(கொழும்பு)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேசத்துக்கான அதிகாரத் தைக்கூட வழங்க மறுக்கும் இந்த அரசாங்கம் எமது மக்க ளுக்கு எப்படி அரசியல் தீர்வை வழங்குமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவ ட்ட எம்.பி.கவீந்திரன் கோடீஸ்வ ரன் நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார்.

1992-1993 ஆம் ஆண்டு 28 பிரதேச செயலகங்களை தரமு யர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து 27 பிரதேச செயலகங்கள் தரமுயர்த்தப்பட்டு அவற்றுக்கான அனைத்து அதி காரங்களும் வழங்கப்பட்ட போதும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் மட்டும் தர முயர்த்தப்படாது அதிகாரங்கள் வழங்கப்படாது புறக்கணிக்கப் பட்டது.

இது பாரதூரமான குற்றம். அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை, நீதி மறுக் கப்பட்டுள்ளது. தமிழினம் தனது நிர்வாகத்தை, நிதி அதிகாரத்தை, காணி அதிகாரத்தை பயன்படுத் தக்கூடாதென திட்டமிட்டுத் தடுக் கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே கல்முனை வடக்கு தமிழ் பிரதேசத்துக்காக இந்த சபையிலுள்ள ஒருவரைத் தவிர ஏனைய 224 எம்.பிக்களும் குரல் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (இ-7)

# தமிழ்-முஸ்லிம் எம்.பி.க்களுக்கிடையில் நாடாளுமன்றத்தில் வாய்த்தர்க்கம்

(கொழும்பு)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில், தமிழ், முஸ்லிம் எம்.பிக்களுக் கிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

தமிழர்களை அடக்கும் திட்ட மிட்ட சூழ்ச்சியை முஸ்லிம் தலை மைகள் ஏற்படுத்துவதாக தமிழ் எம்.பிக்கள் குற்றம் சுமத்துகை யில் இதுவரை இல்லாத பிரச்சி னைகளை இப்போது உருவாக்க முயற்சிப்பதாக முஸ்லிம் எம்.பிக் கள் கருத்துக்களை முன்வைத்த னர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபி விருத்தி அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற் றது.

இதன்போதே தமிழ்,முஸ்லிம் எம்.பிக்கள் கல்முனை பிரதேச செயலக பிரச்சினை குறித்து வாத விவாதங்களையும் விமர்ச னங்களையும் முன் வைத்த னர். (இ-7)

# தேசிய தலைவராக செயற்பட வேண்டும் சம்பிக்கவிடம் மரிக்கார் கோரிக்கை



(கொழும்பு)

குறிப்பிட்ட இனத்துக்கென்று இல்லாமல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எதிர்காலத்தில் இந் நாட்டின் தேசியத் தலைவராக நின்று செயற்பட வேண்டும் என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசி யக் கட்சி பாராளுமன்ற உறு ப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரி வித்தார்.

மீத்தொட்டமுல்லை குப் பையை சுத்திகரித்து அப்பிரதேச மக்களுக்கு தீர்வு வழங்குவதில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கையாண்ட முறைமை பாராட் டத்தக்கது.

தற்பொழுது மீத்தொட்ட முல்லை குப்பைமேடு ஒழுங் கான முறைமைக்கு மாறி வரு கின்றது.

அமைச்சர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அப்பிரதேசத்தில் கூறி யிருந்த கருத்துக்களும் அனை வரினதும் வரவேற்பைப் பெற் றிருந்தது. எனவே, அமைச்சர் சம்பிக்க ரணவக்க தேசிய தலை மைத்துவத்தை நோக்கி நகர் வதற்கு சகல இனத்தவர்களி னதும் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மேல் மாகாண நகர அபிவி ருத்தி அமைச்சர் சம்பிக்க ரண



வக்கவின் அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே மரிக்கார் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சம்பிக்க ரண வக்க தீவிர இனவாத சிந்தனைப் போக்கு கொண்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பல்வேறு துறைகளில் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி பேரணி



(மருதானை)

அரச மற்றும் தனியார் ஊழி யர்களின் சம்பள உயர்வு, தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறை களில் காணப்படும் குறைபாடு களை நிவர்த்தி செய்க் கோரி ஒன்றிணைந்த தொழிற் சங்கங் களால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பேரணி பிற்பகல் 2 மணியளவில் மருதானையில் ஆரம்பமானதுடன், 400 இற்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர் கள் பேரணியாக கோஷங்களை எழுப்பியவாறும் பதாகை களை ஏந்திய வண்ணமும் கோட்டை புகையிரத நிலையம் வரை பேரணியாகச் சென்ற னர்.

இந்த எதிர்ப்புப் பேரணியில் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் மற்றும் 16 இற்கும் அதிகமான தொழிற் சங்கங்கள் கலந்துகொண்டன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கடலுக்குள் எரிமலை

1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஒரு நாள் அதிகாலை நேரம். இருள் இன்னமும் சூழ்ந்திருக்கின்றது. இன்னும் சரியாக விடியவில்லை.

ஐஸ்லிவர் எனும் மீன்பிடிப் படகு கடலினுள் போய்க் கொண் டிருக்கின்றது.

ஜெய்ர் பிரிக்லாஸ்கர் என்னும் இடத்திற்கு மேற்கே வெஸ் ட்மான் என்னும் தீவுகளுடைய தெற்கு முனைக்கு அருகில் ஒரு இடம். அங்குதான் அந்த மீன்பிடிப் படகு போய்க் கொண்டிருக் கின்றது.

மீன் பிடிப்பதற்காக வலையை விரித்த பொழுது அந்த அதிசயம் நடந்தது! என்ன நடந்தது தெரியுமா?

திபர் என்று கடல் அலைகள் எல்லாம் சீறி எழுந்தது. படகு மிகவும் தள்ளாட ஆரம்பித்தது! படகிலே இருந்த மீனவர்கள் தென்கிழக்கிலே உள்ள கடல் பகுதியைப் பார்த்தார்கள்.

அவர்களுக்குப் புரியவில்லை. மிகப் பெரிய ஆச்சரியம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

கடல் பரப்பிற்கு மேலே புகை சீறி வந்து கொண்டிருக்கின்றது. புகை மட்டுமல்ல... ஆவி, சாம்பல், பாறை துண்டுகள் இப்படி பல வந்து கொண்டிருக்கின்றன.

இவை மெதுவாக வராமல் மிகவும் வேகமாக வந்து கொண்டி ருகின்றது. கடற்பரப்பின் மேல் நூற்றுக்கணக்கான மீற்றருக்கு மேல் அது போய்க் கொண்டிருக்கின்றது.

அடுத்த 48 மணி நேரத்திலே, அந்த இடத்திலே கடல் மேற் பரப்பிலே சின்ன மலைமேடு உருவாகியது. பின் அது தீவாக மாறியது. மீன்பிடிக்கப் போனவர்கள் நேரடியாக அக்காட்சியைப் பார்த்தார்கள்.

இது எப்படி நடந்திருக்கும் என்று நினைக்கின்றீர்கள். எரிம லைகள் பூமியில் மட்டும் தான் இருக்கின்றது என்று நினைத் தீர்கள்! கடலுக்கு அடியிலேயும் இருக்கின்றது.

கடலுக்கு அடியில் உள்ள எரிமலையும் வெடிக்கும். எரிமலைக் குழம்புகள் பொங்கி கடலுக்கு மேலே வந்துவிடுகின்றது. அது அப்படியே பரவி தீவாக மாறிவிடுகின்றது.

இதைப்போல உருவாகும் தீவுகள் எப்பொழுதும் நிலைத்து நிற்பது இல்லை. காலப்போக்கில் கடல் அலைகள் அடித்துக் கொண்டு போய்விடும். இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

ஆனால் இப்பொழுது பேசிக் கொண்டிருந்தோமே அந்தத் தீவு அப்படி ஆகாது போல் இருக்கின்றது.

ஏன் என்றால்...இந்தச் சம்பவம் நடந்து சரியாக மூன்று மாதம் கழித்து மறுபடியும் அதே தீவிலே...

முன்னால் வெடித்த எரிமலை வாய்க்குப் பக்கத்திலே இன் னொரு எரிமலை வெடித்தது. முன்னர் வந்தது போன்று அதிக மான எரிமலைக் குழம்பு பொங்கி வந்துவிட்டது. அதே தீவிலே மேற்பரப்பிலே பரவிப் படிந்து அந்தப் பரப்பை இன்னமும் வலுவாக் கிவிட்டது. இன்று அந்தத் தீவு அழகாகவுள்ளது.

அந்த புதுத் தீவின் பெயர் சர்ட்சி. இது என்ன பெயர் என்கின் றீர்களா?

இந்தத் தீவு ஐஸ்லாந்து தென்மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ளது.

ஐஸ்லாந்தில் ஒரு புராணக் கதை உண்டு. அந்தப் புராணத்தில் நெருப்பு அரக்கன் ஒருத்தன் உண்டு. அவன் பெயர் சர்ட்ச்.

அவன் ஞாபகார்த்தமாக சர்ட்சி என்று பெயர் வைத்து விட் டார்கள்.

சர்ட்சி தீவில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் உள்ளது. அங்கு உயிர்கள் உருவாகின்ற விதம் எப்படி என்னும் ஆராய்ச்சி நடந்து கொண் டிருக்கின்றது.

பத்து வருடத்திற்குள் தாவர விதைகள் கடல் வழியியே மிதந்து அந்தத் தீவிற்கு வந்ததால் அங்கு செடி, கொடி என்று மிகவும் அழகாக அத் தீவு காட்சியளிக்கின்றது.

அத்தீவைப் பார்த்துவிட்டு வரலாம். இருந்தாலும் எமது துர் அதிர்ஷ்டவசத்தினால் அத்தீவு கடலுக்கு அடியினுள் போய் விட் டால் என்ன செய்வது? நீச்சல் தெரிந்தால் அடுத்த தீவுக்கு வந்து விடலாம்.

“என்ன சேர்? நமக்கு அந்த அளவுக்குப் போதாத வேளையா? என்று கேட்கலாம். நான் சும்மா வேடிக்கைக்காக அதைச் சொல்ல வில்லை சேர். எங்களுடைய இராசி அப்படி இருக்கின்றது.

அந்த மீனவர்களுக்கு தீவு மேலே எழும்புவதைப் பார்க்கும் இராசி நமக்கு...கட்டின கட்டடம் பூமிக்குள்ளே அமிழ்கின்றதைப் பார்க்கின்ற இராசி!

கொஞ்ச நாளைக்கு முன்னால் பேப்பரில் பார்த்தீர்கள் அல் லவா? பெங்களூரில் ஒரு முழுக் கட்டடம் பூமிக்குள் போய் ஒளிந்து கொண்டது. இன்னும் கொஞ்ச நாளில்... இங்கே என்ன சேர் தேடிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டால் அதுக்கு “ஒன்று மில்லை சேர் இந்த இடத்திலே புது வீடு ஒன்று கட்டியிருந்தேன் அதைக் காணவில்லை! அதுதான் தேடிக்கொண்டிருக்கின்றேன். என்று யாராவது பதில் சொன்னால் கூட அதிலே ஆச்சரி யப்படு வதற்கு ஒன்றுமில்லை!

'இயற்கையோடு மோதுவது இயலாத காரியம்'

# அரச அலுவலகங்களில் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்த கோரிக்கை

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மின்சார நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு அரச அலுவலகங்களில் மின்சார பாவனையை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு அரச அதிகாரிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

முடியுமானால் தேசிய மின் இணைப்பிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தி மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்துமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று ஏற்பட்டிருக்கும் மின்சார நெருக்கடியை தீர்க்க துரிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் வறட்சி தொடர்ந்தவண்ணமுள்ளது. இதற்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இயற்கையோடு மோதுவது இயலாத காரியம்.

இந்நிலையில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் அரச அலுவலகங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

அலுவலகங்களில்தேவையான நேரத்தில் மட்டும் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும். குறைந்தளவு மின்குமிழ்களை பயன்படுத்த வேண்டும். மின் விசிறிகளை முடிந்தளவு தவிர்த்துக்கொள்ளலாம்.

குளிரூட்டி குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துவதை குறைத்துக்கொள்வதன் மூலம் சிறியளவான தீர்வையாவது எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மின்சார நெருக்கடிக்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அறிக்கை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

தற்போதைய மின்நெருக்கடி முடிவுக்கு வரும் வரை அலரி மாளிகையில் தேசிய மின் இணைப்பின் மூலம் மின்சாரம் பெற்றுக் கொள்வது நிறுத்தப்பட்டிருப் பதாகவும் அத்தியாவசிய மான தேவைக்கு மின் பிறப்பாககி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் பிர்தமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசின் இறுதி அத்தியாயம் ஆரம்பம்

## சம்பிக்க, வஜிர சுயமாக பதவி விலக வேண்டும்– செஹான்

(கொழும்பு)



அரசாங்கத்தின் இறுதி அத்தியாயம் ஆரம்பித்து விட்டது. இரண்டு அமைச்சுக்கான செலவு தலைப்புக்கள் தொடர்பிலான நிதி செலவீன ஒதுக்கீடுகள் முழுமையாக தோற்கடிக்கப்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் சுயமாகவே தமது அமைச்சு பதவிகளை துறக்க வேண்டும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மேலும் 22 சுற்றுலா பொலிஸ் நிலையங்களை நிறுவ நடவடிக்கை

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி, நாடளாவிய ரீதியில் 22 சுற்றுலா பொலிஸ் நிலையங்களை நிறுவுவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், முறைகேடுகளை கட்டுப்படுத்தி, சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில்கடந்த 2007 ஆம் ஆண்டு பொலிஸ் சுற்றுலாப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, தற்போது நாடளாவிய ரீதியில் 11 சுற்றுலாப் பொலிஸ் பிரிவுகள் காணப்படும் நிலையில், மேலும் 22 சுற்றுலாப் பொலிஸ் நிலையங்களை நிறுவவுள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச்சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் அச்சபை அறிவித்துள்ளது.

ஆயினும்சுற்றுலா பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்காக காணிகளைத் தெரிவு செய்வதில்சவால்கள் காணப்படுவதால், இலங்கை சுற்றுலா அபிவி ருத்தி அதிகார சபையானது, சிறிய இடப்பரப்பில் அமையும் வகையில் கொள்கலன்களை பயன்படுத்தி சுற்றுலாப் பொலிஸ் நிலை யங்களை அமைக்க நடவ டிக்கை எடுத்துள்ளது.

அதன் அடிப்படையில், ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், தங்குமிடம் மற்றும் கழிப்பறை வசதிகளை உள்ளடக்கியதாக, 4 கொள்கலன்கள் பயன்படுத்தி அமைக்கப்படவுள்ளன.

ரூபா 5 மில்லியன் செலவில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடனான இவ்வாறான தொகுதியைக் கொண்ட பொலிஸ் நிலையமொன்று காலி, மிரிஸ்ஸவில் திறக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சுற்றுலா அபிவிருத்தி, வன ஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர்கிஷ் கோமஸ் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கில் மின்வாசிப்பாளர்களாக தமிழர்கள்

## அரசாங்கம் உறுதி!

(கொழும்பு)

வடக்கில் மின்வாசிப்பாளர்களாக தமிழ் பேசுபவர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளது.

இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

இந்த விவாதத்தில் கருத்து வெளியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வடக்கில் மின்வாசிப்பாளர்களாக தமிழ் பேசுபவர்களை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப் பதில் வழங்கிய போதே அமைச்சர் ரவி கருணாநாயக்க, வடக்கில் மின் வாசிப்பாளர்களாக தமிழ் பேசுபவர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என உறுதிமொழி வழங்கினார்.

இதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் உறுதி மொழி வழங்கியுள்ளார். (இ-7)

# முப்படைகளின் பிரதானியுடன் மலேசியப் பிரதமர் சந்திப்பு



(கொழும்பு)

முப்படைகளின் பிர தானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன மலேசியப் பிரதமர் மகாதிர் மொஹமட்டை சந்தித்தார்.

மலேசியாவின் 15 ஆவது லங்காவி சர்வதேச கடல்சார் மற்றும் ஏரோஸ்பேஸ் கண்காட்சி இடம்பெற்று வருகின்றது. குறித்த கண்காட்சியில் பங்குபற்ற முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜே குணரட்ன மலேசியாவுக்குச் சென்ற நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த கண்காட்சியில் 12 நாடுகள் பங்கேற்றுள்ள நிலை யில் 17 மலேசிய கடற்படையின் கப்பல்கள் உள்ளடங்கலாக 40 கப்பல்கள் இணைந்துள்ளன.

இதேவேளை, இலங்கைக் கடற்படையின் சாகர என்ற கப்ப லும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 527 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய 527 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"கல்விப் பொதுத்தராதர சாதா ரண தரப் பரீட்சை தொடர்பில், 1,315 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததாகவும், அவற்றுள் 738 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா:26 ¼உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில், வெளிநாடு
தொ.இ: B/1745

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 1
கி.பா: 26 ¼
உயரம்: 6'
தகைமை/தொழில்:M.Sc, Electronic Engineer
எதிர்பார்ப்பு: A/Lமேல் படித்தபெண், தொழில் தகைமை விரும்பதக்கது
தொ.இ: B/1798

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 27 ½செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, London
எதிர்பார்ப்பு: A/Lமேல் கல்வி தகைமை, ஆங்கிலம் பேசக்கூடியவர்
தொ.இ: B/1846

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:பூசம் 2கி.பா: 79 ¼செவ் 12 ல்உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, அரச ஊழியர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: B/1850

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 46செவ் 1 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/3638

பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
நட்சத்திரம்:சித்திரை 2
கி.பா: 20.25சூரி செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HND IT, IT Officer
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில், வெளிநாடு, இந்துமதமும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3711

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:மகம் 1
கி.பா: 7 ¾
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant
தொ.இ: G/3730

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 44
உயரம்: 4'10"
தகைமை/தொழில்:B.Comபட்டதாரி
எதிர்பார்ப்பு: உள்நாடு/வெளிநாடு
தொ.இ: G/3732

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## பாதுகாப்பு வனப்பகுதிகளில் தீ



(கொழும்பு)

பொல்பித்திகம மற்றும் புத்தல பாதுகாப்பு வனப்பகுதிகளில் 10 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளது.

தீப்பரவல் ஏற்பட்டமை குறித்து பிரதேச மக்களால் வழங்கப்பட்ட தகவலையடுத்து, பொலிஸார் மற்றும் குருநாகல் தீயணைப்புப் படையினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீப்பரவலுக்கான காரணம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதாக கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இதன்போது மனுவுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்க இருப்பதாக பிரதிவாதி சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வழக்கு எதிர்வரும் ஜூன் 28ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் சஜின்வாஸ் மிஹின் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருந்த வேளை, அந் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களால், 833 மில்லியன் ரூபா நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டதாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதைப்பொருட்கள் முதலாம் திகதி அழிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அழிக்கப்படுமென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போது அழிப்பதற்குத் தயார் நிலையிலுள்ள போதைப் பொருட்கள் முதலாம் திகதி ஊடகங்கள் முன்னிலையில் அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## எண்ணெய் சுத்திகரிப்பு தாமதமடையும் அறிகுறி

(கொழும்பு)

3.85 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில், அம்பாந்தோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கான உடன்படிக்கையை இறுதி செய்வதற்கு இன்னும் ஓராண்டு காலமேனும் செல்லும் என்று அதன் முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வேலைத்திட்டத்துக்கான முதலீட்டுப் பங்காளர்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

அத்துடன் வேலைத்திட்டத்தின் நிலையியல் தன்மை குறித்த ஆய்வறிக்கையும் தயாரிக்கப்படவில்லை.


குறித்த வேலைத்திட்டத்துக்கான முதலீட்டை வழங்குகின்ற நிறுவனத்தின் தலைவரான இந்தியாவின் முன்னாள் அமைச்சர் எஸ்.ஜகரட்சகன் இந்த வேலைத் திட்டத்துக்கான ஆரம்பகட்ட யோசனை ஒன்றை தாம் இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்திருப்பதாகவும் எனினும் அந்த யோசனை இறுதி செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கருத்தானது குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் ஐயப்பாட்டை ஏற்படுத்தி இருப்பதாக ரொயிட்டர்ஸ் செய்தி சேவை தெரிவித்துள்ளது. (இ-7)

## பட்ஜெட் வாக்கெடுப்பில் தோல்வி

# தவறை ஏற்றுக் கொள்வதாக ரணில் பகிரங்கமாக அறிவிப்பு

## இனி இவ்வாறு நடக்காதாம்



(கொழும்பு)

பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்துறை, உள்நாட்டு விவகார, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் சபையில் தோற்கடிக்கப்பட்டுள்ளமை குறித்து பிரதமர் ரணில் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்துறை, உள்நாட்டு விவகார, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்தில் குழுநிலை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டன.

குறித்த இரு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்த குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதையடுத்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், வஜிர அபேவர்த்தனவின் கீழுள்ள உள்துறை, உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் 15 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டன. ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 38 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதேவேளை, சம்பிக்க ரணவக்கவின் கீழுள்ள பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் 14 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டன. ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 38 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தநிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை வெளியிட்டுள்ளார்.

நிதி செலவீன ஒதுக்கீடு, சபையில் தோல்வியடையக் காரணம், வாக்கெடுப்பின் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் சபையில் இல்லாதிருந்தமையே என தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த அமைச்சுக்களுக்காக ஒதுக்கீடுகள், திருத்தங்களுடன் மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இதனைப் பிரச்சினையாக கருத வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மென்பொருட்களின் கடவுச்சொற்களை திருடி கப்பம் கோரிய மூவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் தொழில்நுட்ப அலுவலகம் ஒன்றிலிருந்த கணனி மற்றும் அதன் மென்பொருட்களின் கடவுச்சொற்களை நூதனமான முறையில் திருடி கப்பம் கேட்ட மூவரை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உவர்மலைப் பகுதியில் இயங்கிவந்த குறித்த அலுவலகம் ஒன்றிலிருந்தே இவ்வாறு பொருட்கள் களவாடப்பட்டு கப்பம் கோரப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக 22.25.27 வயதுடைய சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் வேலை பார்த்து வந்த நபர் ஒருவருக்கு அவ் அலுவலகத்தால் போதுமான சம்பளம் வழங்கப்படாதுள்ளது.

இதன் காரணமாக குறித்த நபர், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் இரண்டாம் வருட தகவல் தொழில்நுட்ப பீட மாணவனான அவரது தம்பியாருடன் இணைந்து குறித்த குற்றச் செயலில் ஈடுபட்டமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் குறித்த அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய கடவுச்சொற்களை நூதனமான முறையில் திருடி, அவ் அலுவலகத்தின் முகாமையாளரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு, தமக்கு ஐம்பது இலட்சம் ரூபாய் வழங்கினால் தாம் குறித்த கடவுச்சொற்களை வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அந்த நிறுவனத்தினரால் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து குறித்த குற்றச்செயலுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் மூன்று இளைஞர்களையும் அதற்கு பயன்படுத்திய மடிக்கணனி மற்றும் கையடக்கத்தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் குறித்த அலுவலகமானது பிரித்தானியாவிலுள்ள 36 வாடிக்கையாளர்களுக்கு வேலை பார்த்து வந்ததாகவும் குறித்த குற்றச்செயலின் காரணமாக அந் நிறுவனமானது ஒரு கோடியே 93 இலட்சம் ரூபாய் (19,300,000) நட்டமடைந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பௌசிக்கு எதிரான வழக்கு ஜூன் 28ம் திகதி விசாரணைக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசிக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கபட்டுள்ளது.

இதன்போது மனுவுக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்க இருப்பதாக பிரதிவாதி சார்பான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வழக்கு எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.




இடர் முகாமைத்துவ அமைச்சராக பதவி வகித்த காலத்தில் ஏ.எச்.எம்.பௌசி அமைச்சுக்கு சொந்தமான 19.5 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்களை சட்டவிரோதமாக பயன்படுத்தியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

208



“இந்தியாவின் முதல் பல்கலைக்கழகங்கள்1857 இல் தோன்றின என்பதைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமாகும். இவை சென்னை, மும்பை, கொல்கத்தா பல்கலைக் கழகங்களாகும். வசதிமிக்க தமிழர் உயர்கல்வியைப் பெறுவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருந் தது.ஆனால் அவர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவாக இருந்தது. உதாரணமாக 1885 இல் சென்னைப் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற் றிய மாணவர்களுள் ஐந்து பேர் மட்டுமே தேர்ச்சியடைந்தனர்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

மேற்சொன்ன புள்ளி விபரங்கள் தமிழர் மத்தியில் எத்தனை துரிதமாகக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன என்பதைக் காட்டுகின்றன.

இதனுடன் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலிருந்து இதற்கு முன்னைய அத்தியாயத்தில் ஆராய்ந்தது போன்று சமய ரீதியான சைவப் பாடசாலைகளும் குறிப்பிடத்தக்க வகையில் துரிதமாக அபிவிருத்தியடைந்தன.

பொருளாதாரத் தேவை, அரச நிறுவனங்களிலும் வர்த்தகத் துறையிலும் தொழில் தேடிக் கொள்வதற்கான விருப்பம் என்பவையே தொழிற்கல்வி, உயர்கல்வி என்பவற்றுக்கான தேவையை தமிழர் மத்தியில் ஏற்படுத்தின.

இந்த வகையில் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளான யாழ்ப்பாணக் கல்லூரி, மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் பாடசாலைகள் என்பன பிரதான பங்கை வகித்தது போன்றே சைவ ஆங்கிலப் பாடசாலையான யாழ்ப்பாண இந்துக் கல்லூரியும் சேவையாற்றியது. இருப்பினும் இப்பாடசாலைகள் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை மட்டுமே வழங்கின.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் கலைப் பட்டதாரி அல்லது சட்டத்துறையில் பட்டதாரிப் பட்டம் பெறுவதற்கான உயர்கல்வியை எவராவது பெறுவதற்கு விரும்பினால் அவர்கள் இந்தியாவுக்கோ அல்லது இங்கிலாந்துக்கோ சென்று அவற்றைத் தொடர்வதுதான் ஒரே வழியாகவிருந்தது.

இந்தியாவின் முதல் பல்கலைக்கழகங்கள் 1857 இல் தோன்றின என்பதைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமாகும். இவை சென்னை, மும்பை, கொல்கத்தா பல்கலைக்கழகங்களாகும். வசதிமிக்க தமிழர் உயர்கல்வியைப் பெறுவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது.

ஆனால் அவர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவாக இருந்தது. உதாரணமாக 1885 இல் சென்னைப் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றிய மாணவர்களுள் ஐந்து பேர் மட்டுமே தேர்ச்சியடைந்தனர்.

கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் கலைமாணிப் பட்டம் (Bachelor of Arts) மற்றும் கலைமாணி முதல்வருட (First in Arts) பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் யாழ்ப்பாணத்திலிருந்து 21 பேர் மட்டுமே தேறினர்.

உயர்கல்வித் துறையில் எவ்வளவு குறைந்த எண்ணிக்கையான தமிழர் பிரவேசித்தனர் என்பதை இப்புள்ளிவிபரம் காட்டுகின்றது. 1899இல் கொல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரி இறுதிப் பரீட்சையில் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து ஆறு பேரும் இந்துக் கல்லூரியிலிருந்து நான்கு பேரும் மத்திய கல்லூரியிலிருந்து ஒருவரும் என மொத்தமாக பதினொரு மாணவர்கள் தேர்ச்சியடைந்தனர்.

1895 இல் இலங்கை முழுவதிலும் இருந்து கொல்கத்தாப் பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சையில் 52 மாணவர்கள் சித்தியடைந்தனர்.

இவர்களில் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து 19 பேரும் இந்துக் கல்லூரியிலிருந்து 10 பேரும் பரியோவான் கல்லூரியிலிருந்து ஒருவரும் இருந்தனர்.

இப்பெறுபேறுகள் மூலம் ஆரம்பித்து ஐந்து வருடங்களேயான இந்துக் கல்லூரி இலங்கையின் கல்வி நிறுவனங்களுள் முக்கிய இடத்தைப் பெற்றதன் சிறப்பை உணர்த்துகின்றது.

கொல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் பிரவேசப் பரீட்சைக்கு தோற்றுவித்த 16 மாணவர்களுள் இருவர் முதல் வகுப்பிலும் நான்கு பேர் இரண்டாம் வகுப்பிலும் நான்கு பேர் மூன்றாம் வகுப்பிலும் தேறியிருந்தது இதற்குச் சான்றாகும்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் தேறியவர்களின் சதவீதத்தைப் பார்க்கையில் யாழ்ப்பாணக் கல்லூரிகள் அனைத்திலும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியே அதி உயர்ந்த புள்ளியைப் பெற்றிருந்தது.

(40 சதவீதமே பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரியுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி 63 சதவீதத்தைப் பெற்றிருந்தது).

1894 இல் இக்கல்லூரி கொல்கத்தாப் பல்கலைக்கழகத்தினால் இணைக் கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டபோது இதன் அந்தஸ்து உறுதிசெய்யப்பட்டது.

கலைப்பட்டதாரிப் பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு முற் பரீட்சைக்கான கல்வியை அளிப்பதற்கு இத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கொல்கத்தாப் பல்கலைக் கழகத்தினால் ஒரு பல்கலைக் கழகமாக இப்பாடசாலை ஏற்றுக்கொள்ளப்பட்டமை வரலாற்றில் முதலாவது தங்க மைல் கல் ஆகும்.

சில வருடங்களின் பின்னர் விக்ரோறியாக் கல்லூரியும் (1896), மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியைப் போன்று கல்வி வாய்ப்புக்களை அளிக்கும் தகைமை பெற்றன.

ஆரம்பத்தில் இங்கிலாந்தில் நடத்தப்பட்ட கேம்பிரிஜ் பிரவேசப் பரீட்சை பின்பு யாழ்ப்பாணத்திலும் தமிழருக்குத் தோற்றும் வசதியை அளித்து அவர்கள் உயர்கல்வியை இங்கிலாந்தில் தொடரும் வாய்ப்பை வழங்கியது.

(தொடரும்)

# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை .......

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**யா/வரணி மத்திய கல்லூரி**

என்.யாருசா-8ஏபி, ஆர். நிகர்சன்-7ஏபிசி, கே.விதுசன்-4ஏ4பிசி, கே.ஜனுசா-3ஏ6பி, வை.செந்துரி-4ஏபி2சி2எஸ், வை.கிரியா-3ஏ3பி3சி, எஸ். ரணுயா-3ஏ5பிசி,வி.யாழவன்-3ஏ5பிஎஸ்,கே. நிலோஜினி-2ஏ2பி4சிஎஸ், கே.ரவிந்தன்-ஏ2பி2சி4எஸ், வை. யசிந்தினி- ஏ4பி4சி, கே. யசிந்தா- ஏ2பி5சிஎஸ், கே. தர்மிளா- 2ஏ2பி5சி, எம். ஜெனிபா-2ஏ6சிஎஸ், ரி. நிசாந்தன்- ஏ3பி3சி எஸ், ஆர். சாருயா-2ஏ2சி 4எஸ், எஸ்.மதுசா- ஏ 2பி3சி2எஸ், ரி. யனுசிகா - ஏபி4சி2எஸ், யு. கேசனா - ஏ3பி3சி2எஸ், கே. தனுசன்- ஏ4சி3எஸ்

**யா/வட்டு.மத்திய கல்லூரி**

க.ஹர்சிகா-8ஏசி, சி.ஹஜீபனா-6ஏ2பிசி, பு.அபர்ணா-6ஏ2பிசி, சி.பிரவின்ஜா-3ஏ5பிசி, ய.சனோயினி-3ஏ3பி2சிஎஸ், ஜெ.பரிதி-3ஏ2பி3சிஎஸ், ப.அச்சுதன்-3ஏ2பிசிஎஸ், ஜ.அபிசாயினி-2ஏ2பிசி4எஸ், சி. தேனுஜா-2ஏ2சி3எஸ், யோ.மீனலோயினி-ஏபி4சி3எஸ், த.அனுயா-ஏபி2சி3எஸ், பி.சஜதீபன்-ஏ4சி2எஸ், ம.தர்மிலன்-ஏ2சி4எஸ், க.கோபிகா-3பி2சி2எஸ், ஞா.ஏஞ்சலா-2பி5சி2எஸ், ம.சாரங்கன்-2பி2சி4எஸ், சி.சாரூபன் -4சி3எஸ், ஜெ.அனோஜன்-3சி4எஸ்.

**கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்**

ச.தேனுசன் -9ஏ, வே.மதுசாகினி-9ஏ, ச.லக்சிகா-9ஏ, த.தமிழினி-9ஏ, பி.அமுதினி-9ஏ.த.பிறைமதி-8ஏபி, வி.பானுஜா-8ஏபி, உ.பவசுதன்-8ஏபி, பி.விதுசியா-7ஏ2பி, சா.சர்மிளா-6ஏ3பி, பி.நிறோசன்-5ஏ4பி, ச.கேசிகா-5ஏ3பிசி, த.நிலாஷினி-5ஏ2பி2சி

**வவு/நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயம்**

ந.தயநந்தன் -8ஏபி .சு.தனுஜா-7ஏ2பி, க. சமர்வாணன்-7ஏசி

**கோணாவில் மகா வித்தியாலயம்**

அ. அபலாஷ்-6ஏ3பி, கு. கோகுலன்-4ஏ3பி 2சி, வ. டிலக்ஷி-4ஏ3பிசிஎஸ், ச.கஜனிகா 4ஏ4சிஎஸ். (இ-7-10-271)

# உத்தேச ஹஜ் சட்டம் இவ்வருடம் நிறைவேற்றம்

(கொழும்பு)

சகல தரப்பினரினதும் உடன்பாட்டுடனே ஹஜ் சட்டம் அறிமுகப்படுத்தப்படுமென தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

உத்தேச சட்ட வரைவு தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்கள், முஸ்லிம் அமைப்புக்களிடையே குறிப்பிடத்தக்க அளவு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

முதன முறையாக கொண்டு வரப்படவிருக்கும் ஹஜ் சட்ட மூலம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், ஹஜ் கடமைக்கு யாத்திரிகர்களை அழைத்துச் செல்லும் செயற்பாடு புனிதமாக இடம்பெற வேண்டும்.

ஆனால் இதனை முகவர்கள் வியாபாரமாக்கியுள்ளனர். இது தொடர்பில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளையடுத்து உச்ச நீதிமன்றம் வழிகாட்டலொன்றை அறிமுகம் செய்தது. இதனடிப்படையில் தான் தற்பொழுது பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் ஹஜ் தொடர்பிலுள்ள குறைபாடுகளுக்கு தீர்வு ஏற்படும். கூடுதல் கட்டணம் அறவிடுவது, முறைகேடுகள் இடம்பெறுவது பதிவு செய்தும் நீண்டகாலமாக ஹஜ் கடமை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைக்காமை உட்பட அநேக



பிரச்சினைகளுக்கு இதனூடாக தீர்வு ஏற்படும்

ஹஜ் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கடந்த வாரம் கூட்டமொன்று நடத்தப்பட்டது. இது தொடர்பான சட்ட நகல் எம்.பிக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

உலமா சபை அடங்கலான முஸ்லிம் அமைப்புக்களின் கருத்துகளும் ஆலோசனைகளும் பெறப்பட்டன.சில யோசனைகள் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன.பல விடயங்கள் தொடர்பில் உடன்பாடு காணப்படுகிறது. மாற்று யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

புதிய சட்ட மூலம் கொண்டு வரப்பட்ட பின்னர் அரசிற்கு கூடுதல் அதிகாரங்கள் கிடைக்கும்.

ஹஜ் யாத்திரிகர்களை அனுப்புவதை அரசாங்கத்தால் கூட முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதவியணி ஆணைக்குழுவிற்கான புதிய தலைவர் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

தேசிய சம்பளம், பதவியணி ஆணைக்குழுவின் புதிய தலைவராக முன்னாள் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான எஸ். ரனுக்கே நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் செயலாளராக முன்னாள் அமைச்சரவை செயலாளர் அநுர ஜெயவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய உறுப்பினர்களாக சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளான சீ.பி.சிறிவர்த்தன, கலாநிதி தமிதா டி சொய்சா, லலித் கன்னங்கர, ஜானக்க சுகததாச, சித்ராங்கனி வாகீஸ்வர, சந்ராணி சேனாரத்ன, கிங்ஸ்லி பெர்னாண்டோ, ஜீ.எஸ். எதிரிசிங்க, எம்.சி. விக்ரமசேகர, வைத்தியர் பாலித அபேகோன், டி.அபேசூரிய, லெஸ்லி தேவேந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டது. (இ-7)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1682

Search for people, places and things

### லதா

கருணையாளன் இலாபம் பார்ப்பதில்லை




### கேசிகா

வகுப்பறை கற்றுத் தந்த பாடத்தை விட வாழ்க்கை கற்றுத் தந்த பாடமே அதிகம்




### தாசன்

நமக்குள் ஆயிரம் சோகங்கள் இருந்தாலும் மற்றவர்களின் பார்வைக்கு நாம் சிரிப்பது போலத்தான் வாழனும்



### விமல்

நீ அடுத்தவனை அழிக்க நினைத்தால் உன்னை அழிக்க ஒருவன் வந்து கொண்டிருப்பான்



### பிரியா

நீ யாருக்கு உதவி செய்தாலும் உனக்கு உதவிட யாருமில்லை.... யாருக்கு உண்மையாய் இருந்தாலும் முடிவில் ஏமாற்றப்படுபவன் நீயே... நீ யாருக்கு நல்லது நினைத்தாலும் உனக்கு நல்லது நடக்காது



### ஈசன்



விநோத உடைப் போட்டியில் மாணவன் செய்த விநோதம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கஞ்சிபான இம்ரான் குறித்து திடுக்கிடும் தகவல் 4 கொலைகள், 14 கொலை முயற்சி வழக்குகள்

(கொழும்பு)

சி.ஐ.டி. பிரிவில் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்ட கஞ்சிபான இம்ரான் சி.சி.டி.யிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் 4 கொலைகள் மற்றும் 14 கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக அவர் அந்த பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துரே மதூஸ்டன் கைது செய்யப்பட்ட கொழும்பின் பிரபல பாதாள உலகத் தலைவனும் போதைப் பொருள் கடத்தல் மன்னனுமான கஞ்சிபான இம்ரான் எனப்படும் 34 வயது மொஹம்மட் நஜீம் மொஹம்மட் இம்ரான் டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்டார்.

இதன்போது அவருடன் அமீரகத்தில் கைதான 38 வயதான ஜங்கா எனப்படும் தும்பேதொர ஹேவா தனுஷ்க கௌஷால், ரொட்டும்ப அமில எனப்படும் 37 வயது அமில சம்பத் சேபால ரத்நாயக்க மற்றும் 42 வயது கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அண்டர்ஷன் பேர்டினன்ஸ் ஆகியோரும் நாடு கடத்தப்பட்டனர்.

டுபாயில் இருந்து வந்த பிளய் டுபாய் விமான சேவைக்கு சொந்தமான எப்.இஸட் 547 எனும் விமானத்திலேயே இவர்கள் நாடு கடத்தப்பட்டிருந்த நிலையில், காலை 6.15 மணியளவில் இவர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சி.ஐ.டி.யினர் பொறுப்பேற்றனர்.

இதன்போது கஞ்சிபான இம்ரானும், ரொட்டும்பே அமிலவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யூ.எல்.101 எனும் ஸ்ரீ லங்கன் விமான சேவை விமானத்தில் மாலைதீவுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும், பாதுகாப்பு தரப்பினர் அதற்கு முன்பதாக தமது பொறுப்பில் அவர்களை எடுத்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை வரை கட்டுநாயக்க விமான நிலைய சி.ஐ.டி. பிரிவில் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கஞ்சிபான இம்ரான் சி.சி.டி.யிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் 4 கொலைகள் மற்றும் 14 கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக அவர் அந்த பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைவிட அவருடன் சிக்கிய ஜங்கா மற்றும் ரொட்டம்பே அமில ஆகியோர் மாத்தறை பிராந்தியத்தில் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் அவசியமான சந்தேக நபர்கள் என்பதால் அவர்கள் எம்.சி.டி. எனப்படும் மாத்தறை குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

நாடு கடத்தப்பட்ட கொழும்பு 13 ஐ சேர்ந்த 42 வயது வாகன உதிரிப்பாக வர்த்தகர் எனக் கூறப்படும் அண்டர்ஷன் பேர்டினன்ஸ் தொடர்பில் பெரிதாக குற்றச்சாட்டுக்கள் எதுவும் மாலை வரை வெளிப்பட்டிராத நிலையில், அவரை தமது பொறுப்பில் எடுத்து சி.ஐ.டி. மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

அவ்விசாரணைகளின் பின்னர் அவர் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு குப்பைகளுக்கு எதிரான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றம்

(வண்ணாத்தவில்லு)

கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவக்காட்டில் கொட்டும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, புத்தளம் வண்ணாத்தவில்லு பிரதேச சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வண்ணாத்தவில்லு பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு தவிசாளர் சமந்த முணசிங்க தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இணைந்து வண்ணாத்தவில்லு பிரதேச சபையில் ஆட்சி அமைத்துள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட வண்ணாத்தவில்லு பிரதேச சபையில், நேற்று முன்தினம் சபை அமர்வில் அனைத்து உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

இதன்போது, கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவக்காட்டில் கொட்டும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எம்.எம். அனஸ்தீன் கொண்டுவந்த பிரேரணை, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது உரையாற்றிய பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள்,

எந்த சந்தர்ப்பத்திலும் குப்பைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்க முடியாது என ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனையடுத்து, குப்பைத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் திறந்த வாக்களிப்பு இடம்பெற்றது.

இந்த வாக்களிப்பில் பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் 6 பேர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நால்வரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சுயேட்சைக் குழு 1 உறுப்பினர்கள் தலா ஒவ்வொருவரும் என 14 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இந்த வாக்களிப்பில் நான்கு உறுப்பினர்கள் நடுநிலை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீதி விபத்துக்கு பாதசாரிகளே பொறுப்பேற்க வேண்டும்

## ருவான் குணசேகர கூறுகிறார்



(கொழும்பு)

பல வீதி விபத்துக்களுக்கு சாரதிகள் போன்றே பாதசாரிகளும் பொறுப்பேற்க வேண்டும் என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பல வீதி விபத்துக்களுக்கு சாரதிகள் போன்றே பாதசாரிகளும் பொறுப்பேற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களில் உயிரிழப்போரில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் சாரதிகளும் அதில் செல்வோரும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேநேரம் பாதசாரிகளும் அதிகமாக உயிரிழப்பதாகவும், அதற்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை 12 ஆயிரத்து 84 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 12 ஆயிரத்து 84 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் அதிக நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். ஜனவரி மாதத்தில் 5 ஆயிரத்து 576 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 3 ஆயிரத்து 670 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இம்மாதம் இதுவரை 2 ஆயிரத்து 838 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் புனர்வாழ்வு அதிகாரிகள் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இதற்கமைவாக 1068 ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 110 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 2 ஆம் நிலை ஆண் ஜெயிலர் பதவிக்கும் பெண் ஜெயிலர் பதவிக்காக 10 பேரும் புனர்வாழ்வு ஆண் அதிகாரிகளாக 15 பேரும் பெண் புனர்வாழ்வு அதிகாரிகளாக மூவரும் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அத்துடன் இப் பதவிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## பெருந்தோட்ட பாடசாலைகள் 354 இற்கு தலா 2 ஏக்கர் காணிகள்

(கொழும்பு)

பெருந்தோட்டப்புறத்திலுள்ள 354 பாடசாலைகளுக்கு தலா 2 ஏக்கர் காணிகளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பிலான கலந்துரையாடலொன்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக, விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் உள்ளிடோரின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 80 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 70 | 70 | 120 |
| தக்காளி | 80 | 60 | 45 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 80 |
| கோவா | 60 | 80 | 60 | 100 | 80 |
| கரட் | 80 | 70 | 80 | 60 | 120 |
| பூசணி | 40 | 30 | 35 | 80 | 40 |
| புடோல் | 100 | 80 | 50 | 40 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 70 | 60 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 75 | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 140 | 100 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 35 | 35 | 80 |
| லீக்ஸ் | 100 | 80 | 70 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 70 | 40 | 100 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 450 | 250 | 250 | 350 |
| போஞ்சி | 100 | 100 | 110 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | 35 | 30 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 200 | 100 | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 100 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 140 | — | — | — | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 35 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 25 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 110 | 100 | 80 |




# பனிக்கட்டி தேவதை!



மிக மிக நீண்ட காலத்துக்கு முன் ஆல்ப்ஸ் மலையின் சாரலில் ஒரு சின்ன நாடு இருந்தது. அது ஓர் பனி படர்ந்த நாடு. அந்த நாட்டை ஆண்டு வந்தான் மன்னன் ஒருவன். அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் அழகே வடிவானவள். அவளுடைய அழகு, உலகம் பூராவும் பேசப்படத்தக்க அழகாக இருந்தது. ஆகவே அவளை எப்படியாவது மணந்து கொள்ள வேண்டும் என்று பன்னாட்டு இளவரசர்களும் போட்டியிட்டனர்.

எனவே, தன்னை மணக்க வருபவர்களுக்கு அவள் போட்டி ஒன்றை வைத்தாள். அந்தப் போட்டியில் வெல்பவர்களை மணந்து கொள்வதாக அறிவித்தாள்.

தன்னை மணக்க வரும் இளவரசனுக்கு முதலில் ஒரு விருந்து தருவாள். அப்போது அவனுடன் அவளும் அந்த விருந்தில் கலந்து கொள்வாள். அதன் பிறகு ஒரு தட்டில் ஒரு பனிக்கட்டியைக் கொணரச் செய்து அவள் முன் வைப்பாள். அவனுடைய கையில் கெட்டியான நூல் ஒன்றினைக் கொடுத்து அதன் உதவியினால் பனிக்கட்டியை உயரத் தூக்கிக் காட்டச் சொல்வாள். அப்போது அந்தக் கயிற்றை பனிக்கட்டியைச் சுற்றிக் கொண்டு போகக் கூடாது என்று நிபந்தனையும் விதிப்பாள்.

அதாவது நூலின் ஒரு முனையானது பனிக்கட்டியின் மேல் பட்டுக் கொண்டிருக்க வேண்டும். வேண்டுமானால் அதைப் பனிக்கட்டியில் ஒட்டிக் கொள்ளலாம். ஆனால் அதை ஒட்ட பனிப் பொடியைத் தான் உபயோகிக்க வேண்டும் என்பதும் நிபந்தனைகளில் ஒன்று.

ஒவ்வொரு நாளும் பலப்பல ராஜ குமாரர்கள் வந்தனர். அவர்கள் காலை, மதியம், இரவுச் சாப்பாட்டு வேளையில் அழைக்கப்பட்டனர். தோற்றவர்களைச் சிறையில் பிடித்து அடைக்கும்படி கட்டளையிட்டாள்.

ஏன், இவ்வளவு பேசும் நீ அதைச் செய்து காட்டு என்று எவராவது துடுக்காகக் கேட்டால் அவள் அதைச் செய்தும் காட்டுவாள். இது ஏமாற்றும் வேலை அல்ல, எளிதில் வெல்லும் ஒரு சிறு தேர்வுதான் என்பாள். எனவே முகம் வாடி, அவமானப்பட்டு சிறைப்பட்டனர் இளவரசர்கள்! அவர்களை வழக்கமான குற்றவாளிகளை அடைக்கும் சிறைச்சாலையிலே அடைக்காமல் தன் அரண்மனையின் ஒரு பக்கத்திலுள்ள பெரிய மாளிகையிலேயே அடைத்து வைத்தாள்.

நாட்கள் ஓடின. ஓராண்டு விளையாட்டுப் போல ஓடி மறைந்தது. அந்த நாட்டுக்கு அருகிலே இன்னொரு பெரிய நாடு இருந்தது. அந்த நாட்டின் இளவரசனின் பெயர் ஜான். அவன் மேரியாவின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவளை மணந்து கொள்ள ஆசைப்பட்டான். எனவே, மேரியாவின் நாட்டில் இருந்த முதல் அமைச்சருக்கு அவன் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதினான். தான் மேரியாவை மணந்து கொள்ள ஆசைப்படுவதாகவும், ஆகவே மேரியா வைக்கும் போட்டியில் கலந்து கொள்ளக் கிளம்பி வரப் போவதாகவும் எப்போது வர வேண்டும் என்றும் கேட்டிருந்தான்.

அந்த முதலமைச்சர் ஆபத்து ஒன்றில் மாட்டிக் கொண்டிருந்தார். அவர் அங்குள்ள இயற்கைக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக அவர் மீது ஒரு புலி பாய்ந்தது.

அந்த வேளையில் நிலை தடுமாறிய அவர் அங்குள்ள பள்ளத் தாக்கிலே உருண்டார். அது மிகவும் ஆழமான பள்ளத் தாக்கு. அதில் விழுந்தவர் இது வரை உயிர் பிழைத்ததே இல்லை. எனவே, அவர் கைக்குக் கிடைத்த மரக்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு தொங்கினார்.

அவர் ஒரு வேளை தப்பி மேலே வரக் கூடும் என்பதை உணர்ந்த புலி மேலேயே உட்கார்ந்து இருந்தது. இதை அருகில் இருந்த மரத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த பரண் ஒன்றில் அமர்ந்திருந்த ஜான் கவனித்தான்.

ஆகவே, அவன் விரைந்து செயலாற்றினான். புலியை அம்புகள் எய்து கொன்றான். காலதாமதம் இல்லாமல் காட்டுக் கொடிகளை முறுக்கி பள்ளத்தாக்கில் தொங்கிக் கொண்டிருந்த முதல் அமைச்சரைப் பிடித்து வெளியே வந்து முதல் உதவிகளைச் செய்தான்.

அன்றைய தினத்திலிருந்து ஜானைத் தன் மகன் போல நேசித்தார். எனவே, தான் அவருக்குக் கடிதம் எழுதி இருந்தான் ஜான். முதல் அமைச்சர் அதற்கு உடனடியாகப் பதில் எழுதினார்.

"அவசரப்படாதே! போட்டியில் வெற்றி பெறுவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளலாம். அதன் பின் போட்டியில் கலந்து கொள்ளலாம்!"

இதற்கிடையே அமைச்சர், மேரியா போட்டியில் எப்படி வென்று காட்டுகிறாள் என்று கண்ணும் கருத்துமாக கண்காணித்தார். ஒரு நாள் அவர் அதைக் கண்டு பிடித்தும் விட்டார்.

அதை அவனுக்குத் தெரியப்படுத்தினார் அமைச்சர். "உடனே புறப்பட்டு வா..." என்று அழைப்பும் அனுப்பினார். ஜான் புறப்பட்டு வந்தான். மேரியாவைச் சந்தித்தான். போட்டியில் கலந்து கொள்ளப் போகிறேன் என்றான்.

"போட்டியில் தோற்றால் சிறைச்சாலை!" என்று கூறினாள் மேரியா. ஜான் சம்மதித்தான். முதலில் விருந்தளிக்கப்பட்டது. பின் ஒரு தட்டிலே பனிக்கட்டி கொண்டு வந்து வைக்கப்பட்டது. ஓர் உறுதியான நூலும் அவனிடம் தரப்பட்டது.

மேரியா கூறினாள்.

"இந்த நூலை உபயோகித்து இந்தப் பனிக்கட்டியினைத் தூக்குங்கள்!"

உடனே ஜான் நூலை எடுத்துப் பனிக்கட்டியின் அடியில் விட்டு சுற்றிலும் கட்டப் போனான். அப்போது மேரியா கூறினாள்.

"இளவரசே! நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. அது சிறு பிள்ளைகூடச் செய்யும் பிள்ளை விளையாட்டு. நூலின் ஒரு நுனி மட்டுமே பனிக் கட்டியின் மேலே இருக்க வேண்டும். அந்த நுனியானது பனிக் கட்டியைப் பற்றிக் கொள்ள,

இன்னொரு நுனியைக் கொண்டு தூக்க வேண்டும்.

அதை ஒட்ட வைக்க இங்கு இருக்கும் பனித் தூளை வேண்டுமானால் உபயோகிக்கலாம்!"

இவ்வாறு, கூறிய அவள் ஒரு கிண்ணத்தில் பனித் தூளைப் போட்டு அவனிடம் தந்தாள்.

"ஓஹோ, இதை முன்பே சொல்லி இருக்கலாமே! இந்தப் பனிப் பொடியைக் கொண்டு இந்தப் பனிக்கட்டியை எளிதில் தூக்கி இருக்க முடியுமே!" என்று கூறினான் அவன்.

அவள் கிண்ணத்தைத் தரும் போதே அவளுக்குத் தெரியாமல் தன் வலது கையினால் தன் மடியில் உள்ள ஏதோ ஒன்றை எடுத்துச் சட்டென்று அக்கிண்ணத்தில் விட்டு விட்டு நூலின் ஒரு நுனியினை எடுத்துப் பனிக் கட்டி மீது வைத்துப் பனித் தூளை எடுத்து அதில் நன்றாக அமுக்கினான்.

பின் மேலும், சிறிதளவு பனிப் பொடியை எடுத்து அதில் போட்டு நன்றாக அமுக்கினான்.

"இந்தப் போட்டியில் நான் வெற்றி பெற்றால் நீ என்னை மணந்து தான் தீர வேண்டும். இல்லையா?" என்று கேட்டான்.

"ஆம். நிபந்தனையே அது தான்! தோற்றுவிட்டால் உங்களுக்குச் சிறைவாசம்தான்!" என்று சொல்லிச் சிரித்தாள் அவள். இவ்வாறு அவர்களுக்குள் உரையாடல் ஒரு சில நிமிடங்கள் நடந்தன. அவன் நூலில் மற்ற நுனியைப் பிடித்துத் தூக்கினான். மெதுவாக அவன் அதைத் தூக்க அந்தப் பனிக் கட்டி உயரக் கிளம்பிச் சென்றது.

மேரியா ஆச்சரியமடைந்தாள். மறுகணமே, அவள் மிகவும் கோபத்தையும் அடைந்தாள். இருவருக்கும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் ஜானே வென்றான். அவள் ஆத்திரத்துடன் தன் அந்தப்புறம் சென்றாள்.

ஜான் அதன் பின் எல்லா இளவரசர்களையும் விடுதலை செய்தான். அவரவர் நாட்டுக்கு மரியாதையுடன் அனுப்பி வைத்தான்.

## ஆத்திசூடி



அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

## பொது அறிவுகள்

- ஊசல் கடிகாரத்தின் தத்துவத்தை கண்டறிந்தவர் யார்?
  கலிலியோ
- உயிரனங்களின் அடிப்படை அலகு எது?
  செல்
- செல்லைக் கண்டறிந்தவர் யார்?
  ராபர்ட் ஹூக்
- செல்லின் கட்டுப்பாட்டு மையம் எது?
  உட்கரு
- விசையின் அலகு என்ன?
  நியூட்டன்
- காலம்/நேரத்தின் அலகு என்ன?
  விநாடி
- நிறையின் அலகு என்ன?
  கி.கிராம்

## தகவல் துணுக்குகள்

- **அலெக்சாண்டர் டூமாஸ்-** உலகிலேயே மிக அதிகமான நூல்களை எழுதியவர் அலெக்சாண்டர் டூமாஸ் ஆவார்.
- **ஏழுகோபுரப்பட்டினம்-** தமிழர் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாமல்லபுரம் நகரம் ஏழுகோபுரபட்டினம் என்று அழைக்கப்படுகிறது.
- **திசைகாட்டும் காந்தம்-** காந்தக்கல்லை திசை காட்டும் கருவியை முதலில் பயன்படுத்தியவர்கள் சீனர்கள்.

நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகளே புத்தகம்.

– டெவோ்ட் கிப்ரான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒரேயடியாக செல்வம் கொட்டுவதென்றால் கடவுள்தான் என்ன செய்ய முடியும்

உன்னையே நீ அறிவாய் என்ற தத்துவம் மிகவும் முக்கியமானது.

தனி மனிதர் தொடக்கம் ஊர், இனக் குழுமம், மொழிசார் மக்கள் கூட்டம், மதம்சார் சமூகம் எனப் பல்வேறு வகையில் விரிந்தும் பரந்தும் வாழுகின்ற உலக மக்களிடம் பல்வகைமை வேறுபாடுகளும் வித்தியாசங்களும் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த உண்மை இனம், மொழி, சமயம் என்றவாறு வகைமைப்படுத்தி நோக்க முடியும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பொதுத் தத்துவத்தை உரைத்த புலவர் தன் பெயரை கணியன் பூங்குன்றனார் என்று பதிவு செய்தார்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தத்துவம் பொதுமை பெற வேண்டுமாக இருந்தால், அதனைக் கூறிய புலவன் தன் பெயரைத் தணிக்கை செய்திருக்க வேண்டும்.

ஆனால் தன் பெயரை கணியன் பூங்குன்றனார் என்று பதிவிட்டதிலிருந்து யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தத்துவம் அமுலாகுவதில் நிறைந்த கடினம் உள்ளதென்பது ஏற்புடையது.

இந்த வகையில் எம் ஈழத் தமிழ் இனத்தின் இன்றைய பொருளாதாரம்சார் மன நிலை என்னவாக இருக்கிறது என்று பார்த்தால், செல்வம் ஒரேயடியாகக் கொட்ட வேண்டும். ஒரு நாளில், ஒரு மாதத்தில், ஒரு வருடத்தில் உழைத்து வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது நம் நினைப்பாக உள்ளது.

ஆனால் சிங்கள மக்களிடம் அந்த எண்ணம் அறவே இல்லை.

அவர்கள் சிறுகச் சிறுக உழைத்து சேமித்து திருப்தியான வாழ்வை வாழுதல் என்பதை தம் இலக்காகக் கொண்டுள்ளனர்.

மல்வானையில் இருந்து ரம்புட்டான் பழத்தைக் கொண்டு வந்து திருநெல்வேலிச் சந்தையில் வைத்து விற்பது; புத்தளம், குருநாகல் உள்ளிட்ட இடங்களில் செவ்விளநீரை வாங்கி வந்து அவற்றை யாழ்ப்பாணத்தில் கொடுப்பது.

தளபாடங்களைத் தோளில் சுமந்து ஊரெல்லாம் திரிந்து விற்பனை செய்வது, அதில் கிடைத்த சிறு இலாபத்தில் மகிழ்வாக வாழ்வது என்பது அவர்களின் பண்பாடு.

ஆனால் எங்கள் நினைப்பு அதுவல்ல. மூன்று நாள் உழைத்தால் நான்காம் நாள் மோட்டார் சைக்கிள் வாங்குமளவுக்கு உழைப்பின் வருமானம் இருக்க வேண்டும்.

இல்லையேல் அந்த உழைப்பு வேண்டாம் என்று கூறுவதற்கே நாம் தயாராக இருக்கின்றோம்.

இதனால் எங்கள் வீட்டு வளவில் கிடைக்கக்கூடிய செல்வங்களை எல்லாம் வீணே விடுகின்றோம்.

உதாரணமாக, இப்போது வேப்பம் மரங்கள் பூக்கத் தொடங்கியுள்ளன. வேப்பம் பூ என்பது மிகச் சிறந்த மருத்துவ குணமுடையது.

உலக நாடுகளில் வேப்பம் பூவுக்கும் வேப்பம் வடகத்துக்கும் நிறைந்த கிராக்கி இருப்பதாக எங்கள் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுவார்.

ஆனால் எங்கள் வீட்டு வளவில் நிற்கின்ற வேப்பம் மரத்துப் பூக்கள் நிலத்தில் கொட்டி வீணாகிறது.

தவிர, எங்கள் சித்த மருத்துவத்தில் முதன்மை பெறும் வேப்பம் எண்ணெய்யைத் தரும் வேப்பம் விதைகளை யாரும் கவனிப்பதாக இல்லை.

எனவே எங்கள் வீட்டு வளவில், அயலில், பொது இடத்தில் நின்று வேம்பு தரும் வேப்பம் பூ, வேப்பம் விதை என்பவற்றைச் சேகரித்து காலம் தரும் பொருளாதாரத்தை எமதாக்குவோம்.

இது நாளடைவில் பெரும் பொருளாதார பலமாக மாறும்.

# இந்திய அரசின் முக்கிய பிரதிநிதிகளுடன் புதுடில்லியில் சுமந்திரன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

சார்க் பாராளுமன்றக் குழுவின் நான்கு நாள் கருத்தரங்கில் பங்குபற்ற புதுடில்லிக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், இந்திய அரசின் முக்கிய பிரதிநிதிகள் சிலருடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றமையால் அரசியல் தலைவர்கள் அனைவரும் பிரசார வேலைகளில் தீவிரமாக உள்ளனர். அதனால் அரசியல் தலைவர்களைச் சுமந்திரன் சந்திக்கவில்லை எனத் தெரிகின்றது.

எனினும், இந்திய அரசின் உயர்நிலை அதிகாரிகள், புலனாய்வுத்துறை உட்பட்ட அமைப்புக்களின் பிரதானிகள் போன்றோர் சுமந்திரனுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர் என அறியவந்தது.

தெற்காசிய பிராந்திய பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி மையத்தில் சார்க் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என நடத்தப்பட்ட நிதி முகாமைத்துவம் தொடர்பான நான்கு நாள் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காகவே சுமந்திரன் புதுடில்லி சென்றிருந்தார்.

அவருடன் இந்தக் கருத்தரங்கில் ஜே.வி.பியின் சுனில ஹந்துன்நெத்தி எம்.பி. மற்றும் சுஜீவசேனசிங்க எம்.பி. ஆகியோரும் புதுடில்லி சென்றிருந்தனர்.

புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுடன் தாம் பேச்சு நடத்தியமையை உறுதிப்படுத்திய சுமந்திரன் எம்.பி., எனினும், அவற்றின் விபரத்தை வெளியிடவில்லை. ஆயினும், இந்தியத் தரப்பு தனது எதிர்பார்ப்புக்களைக் கோடி காட்டியதாக அவர் தெரிவித்தார். (ம-3)

## இனத்துவேசத்தை வளர்க்கமாட்டோம்!

### என்கிறார் வடக்கு ஆளுநர்

வன்முறையையும் இனதுவேசத்தையும் வளர்க்க மாட்டோம் என்பதே இந்த மாநாட்டில் நாம் எடுத்துக் கொண்ட பிரகடனம் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற பௌத்த மாநாட்டில் கலந்து கொண்டதுடன், மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்படி தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர்,

இது பௌத்த மாநாடு என்றாலும் அனைத்து மதங்களுடனான பேச்சுவார்த்தையின் ஆரம்பமாக இருக்கும். வடமாகாணம் பல போர்களை கண்ட மாகாணமாக முடிந்திருக்கிறது.

எத்தனையோ ராணுவங்கள் தமது விருப்பு வெறுப்புகளை செய்த மாகாணமாக இருக்கிறது. இனிமேலும் இந்த மக்கள் எந்தவிதமான கஷ்டதிற்கும் உட்பட கூடாது. ஆனால் போரின் பின்னர் ஆங்காங்கே சிலசம்பவங்கள் நிகழ்ந்திருப்பது உங்களிற்கு தெரியும்.

அதனை உடனடியாக சரி செய்யமுடியாத படியினாலே அதற்கான நீதியை வழங்க முடியாதபடியினாலேதான் அது வளர்ந்து வந்துள்ளது.

எனவே சில சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் கரிசனையுடன் இருக்கின்றோம். இந்த மாநாட்டின் நோக்கம் மதசார்பின்மைமாறாக அனைவரையும் ஒரு இடத்திற்கு கொண்டு வருவதே. அவர்களிற்கு இருக்கும் கஷ்டங்கள் சவாலகளை ஒரு குழுவாக சந்திப்பதுவே.

வடமாகாணத்தில் இருக்கின்ற மொழி, மத, கலாசார வேற்றுமைகளை ஏற்றுக் கொள்கின்றோம். அடுததவர் தம்முடைய மத, மொழி, கலாசாரத்திற்கு எந்தளவு மரியாதை கொடுக்கிறாரோ அந்தமதிப்பையும், மரியாதையையும் கொடுப்பதற்கு நாங்கள் இணங்குகின்றோம். எந்த ஒரு காரணத்திற்கூடாகவேனும் மதத்தை இன்னொருவர் மீது திணிப்பதற்கோ, வலுக்கட்டாயப்படுத்துவதற்கோ நாங்கள் முன்வரமாட்டோம்.

எந்தவிதத்திலும் வன்முறையையும் இனத்துவேசத்தையும் வளர்க்க மாட்டோம் என்பதுவே இந்த மாநாட்டில் நாம் எடுத்து கொண்ட பிரகடனம்.

போர்க்களமாய் இருந்த இந்த பூமியில் இருதரப்பிற்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முன்வந்தவரே இந்த விகாரையின் பௌத்த பிக்கு. போரின் உச்சகட்டத்திலும் அவரது பணி சிறப்பிற்குரியது. வடமாகாணத்தில் நடைபெறும் பௌத்த விடயங்கள் இவரது மேற்பார்வையில் நடக்க வேண்டும். அவர் தமிழ் மக்களையும் பௌத்தத்தையும் நேசிப்பவர என்று தெரிவித்தார். (ம-250)

## வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளரின் வேண்டுகோள்

வலி.தெற்கு பிரதேச சபை உடுவில் உப அலுவலகத்துக் குட்பட்ட அனைத்து வியாபார நிலையங்களுக்குமுரிய வியாபார அனு மதிப்பத்திரத்தினை இது வரை பெற்றுக் கொள்ளா தோர் வரும் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதிக்குள் அனுமதிப்பத்திரத்தினை சபையிடம் பெற்றுக் கொள்ளுமாறும்,

அதேபோல் விடுதிகளை இதுவரை பதிவு செய்யாதோர் தங்கள் விடுதிகளை வரும் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதிக்குள் பதிவு செய்யுமாறும்,

அதுபோல் ஆதனங்களுக்கான நிலுவைகளை இது வரை செலுத்தத் தவறியவர்கள் வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்குள் அவற்றினை செலுத்துமாறு வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன் அறிவித்துள்ளார். (ம-3)

## சுன்னாகம் பகுதியில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

பெற்றோல் குண்டுத் தாக்குதலில் வீட்டின் யன்னல் கண்ணாடி மற்றும் கதிரைகள் என்பன சேதமாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு வியாழக்கிழமை சுன்னாகம் ஐயனார் கோவிலடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,108)

## கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு

### புதிய பீடாதிபதி நியமனம்

யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய பீடாதிபதியாக சுப்பிரமணியம் பரமானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பீடாதிபதியாக இருந்த சதாசிவம் அமிர்தலிங்கம் நேற்று வெள்ளிக்கிழமையுடன் ஓய்வு பெற்றுச் சென்றார்.

இந்நிலையில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக இருந்த நிலையில் மேற்படி பதவி உயர்வு கிடைத்துள்ளமை குறிபபிடத்தக்கது. (ம-10, 272)

## ஹெரோயின் போதைப்பொருளுடன் பெராமகுல்லே சமீர உட்பட 4 பேர் கைது

(கொழும்பு)

கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த போதைப் பொருள் வர்த்தகரான பெராமகுல்லே சமீரவுடன் சேர்த்து நான்கு சந்தேகநபர்கள் வத்தளை, ஹேந்தளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் வான் ஒன்றை சோதனையிட்ட போது ஹெரொயின் போதைப் பொருளுடன் இந்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் போது சந்தேகநபர்களிடமிருந்து 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 100 கிராமுக்கும் அதிக ஹெரொ யின் போதைப் பொருள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ முன்னேறிக் கொண்டே இருங்கள். முறையற்ற ஒரு செயலைச் செய்து விட்டதாகவே நினைத்தாலும் திருப்பிப் பார்க்காதீர்கள். தவறு நடந்திருந்தால் திருத்திக் கொள்ளுங்கள்.
- ❖ மற்றவர்களுக்கு நன்மை செய்வது தான் தர்மம். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவம்.
- ❖ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றையும் கொண்ட மனிதனை நசுக்கக் கூடிய ஆற்றல் யாருக்கும் கிடையாது. இந்த பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் அவனால் சாதிக்க முடியும்.
- ❖ கொழுந்து விட்டெரியும் ஆர்வம் நாலாபுறத்திலும் பரவட்டும். பணியாற்றும் போது ஒரு வேலைக்காரனை போல இருங்கள்.
- ❖ ஆன்மீகத்தை லட்சியமாகப் போற்றுங்கள். மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் சென்றால் நம் பண்பாட்டின் அடிப்படை ஆட்டம் கண்டு விடும்.

# முதன் முதலாக மின்னொளியில் கிரிக்கெட் போட்டி யாழ்.நகரில் துடுப்பாட்ட வரலாற்றில் சாதனை







படங்கள் - ஐ.சிவசாந்தன்

விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியை ஞானம்ஸ் பெயின்ட் ஸ்தாபனத்தார் யாழ்.நகரில் மின்னொளியில் முதன் முறையாக நடத்தத் தீர்மானித்துள்ளார். இது யாழ்.நகரில் துடுப்பாட்ட வரலாற்றுச் சாதனையாக உள்ளது.

இத் தொடரில் 8 அணிகள் இரு பிரிவுகளாகப் பரிக்கப்பட்டு நடத்தப்படவுள்ளது. பிரிவு ஒன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம், கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம், AB விளையாட்டுக்கழகம், சென்றலைட்ஸ் வியைாட்டுக்கழகமும் பிரிவு II இல் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம், யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம், பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம், கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றுகின்றன.

இத் தொடரின் முக்கிய நோக்கம் இளம் துடுப்பாட்ட வீரர்களை களத்துக்கு கொண்டு வருவது. எமது இளைஞர்களுக்கு சர்வதேச நிலை உருவாக வேண்டும் என்பதும் மிக முக்கிய நோக்கமாகும்.

கடந்த வருடம் இத்தொடரில் T.C.C. அணி சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் பங்கு பற்றும் T.C.C. அணி 2019 ஆம் ஆண்டு சோமசுந்தரம் வெற்றிக் கேடயத்தையும் சென்றலைட்ஸ் அணி விக்ரம் ராஜன் கந்து வெற்றிக் கிண்ணத்தையும் சென்றலைட்ஸ் அணி யாழ்.கிரிக்கெட் லீக் வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் முதலாவது போட்டி இன்று பிற்பகல் 5.30 மணிக்கு AB அணிக்கும் சென்றலைட்ஸ் அணிக்கும் இரவு 8.30 மணிக்கு T.C.C. அணிக்கும் கிறாஸ்கொப்பர்ஸ் அணிக்கும் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டி தொடர்பான ஊடக சந்திப்பில் போட்டியினை நடத்தும் விஜயரட்ணம் பிரபன் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது தந்தையாரின் ஞாபகார்த்தமாகவே குறித்த போட்டியினை நடத்துகின்றோம். போட்டிகளை மின்னொளியில் யாழில் முதல் முதலாக நடத்த தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை யாழில் புற்தரை (டேவ்) மைதான வசதிகள் இல்லை. இந்தப் போட்டிகளை புற்தரையில் நடத்தவே எமக்கு விருப்பம். ஆனால் யாழில் அதற்கான வசதிகள் இல்லை.

பாடசாலை மட்டங்களில் விளையாடும் திறமையான வீரர்கள் யாழில் சாக்கில் (மற்றிங்) விளையாடி பழகி வெளியே கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களுக்கு சென்று புற்தரையில் விளையாடும் போது பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். அதனால் அவர்கள் தமது திறமைகளை அங்கே வெளிப்படுத்த முடியவில்லை.

யாழில் இருந்து தேசிய அணிக்குச் செல்லக் கூடிய அளவுக்கு சிறந்த வீரர்கள் இருக்கின்றார்கள். தேசிய அணிக்கு இல்லாவிடினும் B,C அணிக்காவது விளையாடும் அளவுக்கு வீரர்கள் உள்ளனர். அவர்கள் இங்கே மற்றிங்ல விளையாடி பழகி புற்தரையில் விளையாட முடியாது தடுமாறு கின்றார்கள்.

எனவே யாழில் புற்தரை மைதானங்களை உருவாக்க உரிய தரப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு எமது துடுப்பாட்ட வீரர்களின் திறமைகளை வளர்த்து தேசிய அளவில் அவர்களை பிரகாசிக்க செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-க)

## மருதங்கேணி பிரதேச செயலகம் மெய்வன்மை வெற்றிக் கோப்பையை தனதாக்கிய சக்திவேல்!

மருதங்கேணி பிரதேச செயலகம் நடத்திய மெய்வன்மை - 2019 இறுதிப் போட்டிகள் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த போட்டியின் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டத்தில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டியில் மனக்காடு சென்.அன்ரனிஸ் அணியுடன் கொடுக்குளாய் சக்திவேல் அணி மோதியது. விறுவிறுப்பான இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதனையடுத்து வெற்றியைத் தீர்மானிக்கும் தண்ட



உதை மூலம் 5 -4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கொடுக்குளாய் சக்திவேல் அணி வெற்றிக் கோப்பையை தனதாக்கியது.(க)

## கீதனின் அபார கோல் பாடும்மீன் அணி சம்பியன்

கீதனின் அபார ஆட்டத்தால் குருநகர் பாடும்மீன் அணி 21 வயதுக்குட்பட்ட அணி சம்பியனாகியது. யாழ்ப்பாணக் கால் பந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி லீக்கில் அங்கத்துவம் பெற்ற 21 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 28 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

இதில், தொடக்கம் முதல் சிறப்பாக ஆடிய பாடும்மீன் அணி, கீதனின் 'ட்ரிக் கோல்களின் உதவியுடன் 05:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. கீதன் 3 கோல்களையும், கெயின்ஸ், ஆனஸ்ராஜ் தலா 1 கோலையும் போட்டனர். (க-26-106)



தெல்லிப்பழை கோட்ட மட்டத்திலான செயற்பட்டு மகிழ்வோம் கலப்பு அணியில் பங்குபற்றிய கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய தரம் 3,4,5 மாணவர்கள் அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (க)

## கலப்பு நீதிமன்ற...

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நீதியரசர் பகவதி தலைமையிலான சர்வதேச சுயாதீன குழுவை உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட முடியும் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தமது செய்தியில் மேலும் கூறுவதாவது.

ஐக்கிய நாடுகள் சபையில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு வருட காலம் வழங்கி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 21.03.2019 அன்று உறுப்பு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் 40/L.1 என்ற தீர்மானத்தினை நிறைவேற்றி இருப்பது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கின்றது.

போர்க் குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கும் எமது மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இழைக்கப்படுவதற்குமே இந்தப் பிரேரணை வழிவகுக்கப்போகின்றது. இனப்படுகொலை புரிந்து எமது பெண்களை நூற்றுக்கணக்கில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இராணுவத்தை தண்டனையில் இருந்து காப்பாற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த பிரேரணைக்கு சார்பாக செயற்பட்டமையும் வேதனையை அளிக்கின்றது.

30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவோ அல்லது அவற்றை நிறைவேற்றவோ விருப்பம் எதனையும் வெளியிடாத இலங்கை அரசாங்கம் மாறாக இந்த தீர்மானத்தின் முக்கிய பல விடயங்களை மீண்டும் மீண்டும் நிராகரித்தே வந்துள்ளது.

வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படவேண்டும் என்ற 30/1 தீர்மானத்தினை நிறைவேற்ற வலியுறுத்தும் 40/L.1 தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிக்கொண்டே கலப்பு நீதிமன்ற யோசனையை இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் சபையில் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக நிராகரித்திருக்கின்றது. இது எந்த அளவுக்கு இலங்கை அரசாங்கம் 30/1 தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதனையும் அதன் நேர்மைத் தன்மையையும் அதன் ஏமாற்று தந்திரத்தையும் வெளிச்சம்போட்டு காட்டுகின்றது.

ஐ.நாவுக்கு எழுத்துமூலம் கொடுத்த வாக்குறுதிகளையே அடுத்த நிமிடம் காற்றில் பறக்கவிடும் இலங்கை அர சாங்கம் கடந்த பல தசாப்த கால இனப்பிரச்சினையில் எத்தனை ஒப்பந்தங்களை உதாசீனம் செய்திருக்கும் என்பதனையும் இது எந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை யும் விரக்தியையும் கொடுத்திருக்கும் என்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேவேளை, போர்க்குற்றங்களை விசாரணை செய்ய வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிறுவுவதற்கு உடனடியாக உறுப்புநாடுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இலங்கையின் அரசியல் அமைப்பின் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கமுடியாது என்ற அரசாங்கத்தின் கூற்று பொருத்தமற்றது.

2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பி.என்.பகவதி தலைமையில் 16 மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்யும் உடலகம ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு அமைத்த முன்னணி நபர்களைக் கொண்ட சர்வதேச சுயாதீன குழுவை (International Independent Group of Eminent Persons - II GEP) உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கலாம்.

வெளிநாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கம் எவ்வாறு மனித உரிமைகள் மீறல் பொறிமுறைகளில் சர்வதேச தராதரத்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தும் என்பதற்கு நீதியரசர் பகவதி குழு ஒரு சிறந்த உதாரணமாகும்.

அதே போல, இலங்கை அரசாங்கத்தின் உடலகம ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பி லான விசாரணைகள் சர்வதேச தராதரம் மற்றும் கோட்பாடுகளுக்கு அமையாமலும் வெளிப்படைத்தன்மை இன்றியும் நடைபெற்றது என்று கூறி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதை தவிர்க்கும்வகையில் ஒரு வருடத்தின் பின்னர் சர்வதேச சுயாதீன குழுவை நீதியரசர் பகவதி கலைத்தமையானது ஏன் உள்நாட்டு பொறிமுறை இலங்கைக்கு பொருத்தமற்றது என்பதற் கான ஒரு சிறந்த உதாரணமாகும். அப்போது காலஞ்சென்ற நீதியரசர் மார்க் பர்னாண்டோவுடனும் என்னுடனும் குறித்த சர்வதேச சுயாதீனக் குழுவானது கலந்து பேசி அறிவுரைகளையும் பெற்றிருந்தது என்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஆளுநர் சுரேன்..

பெற்ற கூட்டமொன்றிற்கு வழங்கப்பட்ட மதிய உணவில் சிறிய புழு காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட புகாரின் பெயரில் அன்றைய தினம் பிற்பகல் இவ்வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

உணவுச் சட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச சுகாதார பரிசோதகர் ரி.நிசாந்தன் வழக்கைத் தாக்கல் செய்தார். சந்தேகநபரான உணவக முகாமையாளர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

உணவகத்தைச் சுத்தப்படுத்தி சுகாதார ஏற்பாடுகளைச் சீர்செய்து பொதுச்சுகாதார பரிசோதகரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக உணவகம் நேற்று வெள்ளிக்கிழமை வரை இயங்கக்கூடாது என நீதவான் உத்தரவிட்டிருந்தார். முகாமையாளரும் ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று வெள்ளிக்கிழமை வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனத் தெரிவித்து வழக்கு தொடுநர் தரப்பின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணிகள் திருமதி எஸ்.விஜயராணி, எஸ்.ரி.அருச்சுனா. திருமதி சர்மா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஶ்ரீகாந்தா முறையீடு ஒன்றைத் தெரிவித்து சமர்ப்பணங்களைச் செய்தார்.

நீதிமன்றின் உத்தரவின் பெயரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலையே உணவகம் பூட்டப்பட்டது என்றும் தெரிவித்த சட்டத்தரணி அன்றிரவு 8 மணியளவில் சில பொலிஸ் அதிகாரிகள் உணவகத்திற்கு வந்தார்கள் என்றும் அவர்களைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் அங்கு வருகை தந்தார் என்றும் குறிப்பிட்டார்.

சுமார் அரை மணித்தியாலங்களுக்கு மேலாக குறித்த உணவகத்தில் ஆளுநர் ஒரு நாட்டாமை போல நடந்துகொண்டார் என்றும் ஒரு காட்டுத் தர்பார் அங்கு அவரால் நடத்தப்பட்டதென்றும் குற்றஞ்சாட்டிய சட்டத்தரணி ஶ்ரீகாந்தா ஆளுநரின் நடத்தை சட்டவிரோதமானது மாத்திரமன்றி இந்நீதிமன்றின் அதிகார எல்லைக்குள் ஊடுருவிய ஓர் பாரதூரமான விவகாரம் என்றும் தெரிவித்தார். இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வெளியாகியதாகவும் குறிப்பிட்டார்.

நீதிமன்றில் வழக்கு ஒன்றுடன் தொடர்புடைய உணவகத்தில் தலையீடு செய்வதற்கு ஆளுநர் யார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை என அரசியல் சாசனத்தின் கீழ் ஆட்சி முறை மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டிருப்பது ஒரு நிர்வாக அதிகாரியான ஆளுநர் நீதிமன்றத்துடன் உரசிப்பார்க்கின்றார் எனவும் அவர் விமர்சித்தார். ஆட்சிமுறையின் கீழ் ஒவ்வொரு துறையும் தனக்குரியதைச் செய்ய வேண்டும். குதிரையின் வேலையை எருதோ கழுதையோ செய்ய முடியாது.

அதேநேரத்தில் ஒரே உறைக்குள் இரண்டு வாள்கள் இருக்க முடியாது. நீதித்துறையின் சுயாதீனத்திலும் சுதந்திரத்திலும் எவரும் தலையீடு செய்ய முடியாது. இது மிகப் பாரதூரமான விடயம். இதனை கைகட்டி மௌனமாகப் பார்க்க முடியாது. இவ்விடயத்தில் நீதிமன்றின் கௌரவத்தை பாதுகாக்கும் கடமைப்பாடு சட்டத்தரணிகளாகிய எங்களுக்கும் உண்டு. அதற்குப் பிறகுதான் வழக்கின் ஏனைய விடயங்கள் என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

நீதிமன்று ஆளுநரின் நடத்தை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் விண்ணப்பித்தார். இதனை அடுத்து எதிர்வரும் 5ம் திகதி வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனை குறித்த வழக்கில் நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட நீதவான் கட்டளையிட்டார்.

குறித்த உணவகத்தின் பொதுச்சுகாதார பரிசோதகரின் சுகாதார ஏற்பாடுகளை நிறைவு செய்வதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை வரை குறித்த உணவகம் இயங்கக் கூடாது என்றும் நீதவான் கட்டளையிட்டார். (ம-89)

## புத்தாண்டில் மின்...

அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். அத்துடன் மின்னுற்பத்திகளுக்கான புதிய நடவடிக்கைகள் ஏதும் கடந்த ஏழு வருட காலமாக முன்னெடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே இன்று மின்சார விநியோகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் காலங்களில் இந்நிலை ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## மட்டக்களப்பில்...

மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்கள் தீப்பற்றியதாலேயே மூவரும் தீயில் சிக்குண்டு உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக ஏறாவூர் பொலிஸார் கூறினர்.(ம-3)

## 20 ஆயிரம் பட்ட...

இரண்டு மாதங்களுக்குள் இவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். எதிர்கால உலகிற்கு ஏற்ற வகையில் பட்டதாரிகளுக்கு தமது வல்லமையை மேம்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

பட்டதாரிகளிடமிருந்து தேவையான சேவை கிடைக்காமை பாரிய பிரச்சினையாகும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.(ம-3)

## பௌத்தர்களும்...

கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், பௌத்தர்களும், இந்துக்களும் சேர்ந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாத எந்த சூழ்நிலையும் இல்லை. எனவே இருதரப்பினரும் இணைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கைக்கு பௌத்தம் வந்தது வடக்கு இந்தியாவிலிருந்து. இந்து மதம் வந்தது தென் இந்தியாவிலிருந்து. இந்துக்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கையையும் பௌத்தர்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கையையும் ஒருமித்துக் கொண்டு செல்லுகின்ற சூழ்நிலை வேறு யாராலும் முடியாது. எங்களால் மட்டும்தான் முடியும் என தெரிவித்துள்ளார்.(ம-250)

## திருக்கேதீஸ்வர...

இதன் போது சந்தேகநபர்கள் 10 பேரும் மன்றில் முன்னிலையாகினர்.

இதேவேளை குறித்த வழக்கு விசாரணை நேற்றைய தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது கத்தோலிக்க அருட்தந்தையர்கள், மக்கள் என பலர் நீதிமன்ற பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.(ம-3-286-286)

## ஐ.நாவின் குற்ற...

கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இதனை இலங்கை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்கின்றோம் என்றார். (ம-3)

## ஐ.நா மனித உரி...

தொடர் ஆரம்பித்தபோது, ஜனாதிபதி- பிரதமர் அதிகார மோதல் மீண்டும் சூடுபிடித்திருந்தது. ஐ.நா பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதென அரசு எடுத்த முடிவு தொடர்பில், ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்படவில்லை. அரச தூதுக்குழு ஜெனிவா புறப்பட தயாரானபோது, ஜனாதிபதி தலைமையில் இன்னொரு குழுவும் புறப்பட தயாரானது. இறுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இருதரப்புடனும் பேச்சு நடத்தி, இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும், இந்த சம்பவங்களின் முன்னரே, ஜெனிவாவிலுள்ள ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ், இலங்கையும் இணை அனுசரணை வழங்குவதாக 40/1 தீர்மானத்தில் கையொப்பமிட்டு விட்டார். இந்த தகவல் தாமதமாகவே ஜனாதிபதிக்கு கிடைத்து, அவரை கொந்தளிக்க வைத்தது. ஜனாதிபதியின் உத்தரவுகளிற்கமைய, தீர்மானத்தில் பல விடயங்களை நிராகரித்து வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உரையாற்றியிருந்தார்.

நாட்டின் வெளிவிவகாரம், கொள்கை முடிவுகளை ஜனாதிபதியே எடுக்க வேண்டுமென கடந்த சில தினங்களாக ஜனாதிபதி கடுமையாக குறிப்பிட்டு வருகிறார்.

ஜெனிவாவிலுள்ள ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ் மீது ஜனாதிபதியின் கறாரான நடவடிக்கைகள் பாயவுள்ளதன் முன்னேற்பாடு தான் இவையென்ற தகவல் கிடைத்துள்ளது.

எந்த அடிப்படையில் இணைஅனுசரணை வழங்க கையொப்பமிட்டீர்கள் என ஏ.எல்.ஏ.அஸீஸிடம், ஜனாதிபதி செயலகம் விளக்கம் கோரியிருந்தது. பிரதமரின் நிதி ஆலோசகர்களில் ஒருவராக உள்ள மனோ தித்தவெல, பிரதமர் அலுவலகம் சார்பில் தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு, இணை அனுசரணை வழங்க கையொப்பமிடுமாறு அறிவுறுத்தியதாக அஸீஸ் விளக்கமளித்துள்ளார்.

எனினும், இராஜாங்க நடைமுறையில் தூதர் ஒருவர் வெளிவிவகார செயலாளரின் ஆலோசனைப்படியே செயற்பட முடியும். எனினும், இணைஅனுசரணை வழங்கும் விடயத்தை தாம் அறிந்திருக்கவில்லையென வெளிவிவகார செயலாளர், வெளிவிவகார அமைச்சர் தற்போது கையை விரித்துள்ளனர். இதனால் இராஜாங்க நடைமுறையை மீறியே, இணைஅனுசரணை வழங்குவதாக ஏ.எல்.ஏ.அஸீஸ் கையொப்பமிட்டதாக கருதத்தக்க சூழ்நிலை உருவாகியுள்ளது. (ம-3)


மெகா பவர்
திகதி 29/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 363
H 15 15 21 59 64

மஹஜன சம்பத
திகதி 2019/03/29
சீட்டிழுப்பு இலக்கம் 3886
C 8 2 1 4 6 3

கொவிசெத
திகதி 2019.03.29
சீட்டிழுப்பு இலக்கம் 2078
I 04 54 64 77

தன நிதானய
திகதி 2019/03/29
சீட்டிழுப்பு இலக்கம் 0133
A 03 12 22 74

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல ஸ்ரூடியோவிற்கு அடிப்படைக் கணனி அறிவுள்ள பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்கள் தேவை. பருத்தித்துறை பிரதேசத்திற்கு அண்டிய பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(C-5914)

**தொடர்புகளுக்கு : 0777046623, 0770871070**

## Personal Class

இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)

(8272)

**தொடர்பு: 0771901245**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் கடை ஒன்றிற்கு சிட்டை எழுதுநர், கணனி இயக்குநர் பெண் பணியாளர் தேவை.

**தொடர்புகளுக்கு : 0771228841, 0775164928**

(8270)

## ரலண்ட் அக்கடமி TALENT ACADEMY

விசுவமடு (புரந்தன் - முல்லைவீதி) | மல்லாகம் (சந்திக்கு கிழக்குப்புறம்)

### 2021 A/L கலைப்பிரிவு

யாழ்.முன்னணி ஆசிரியர்களினால் மாத்திரம் கற்பிக்கப்படுகின்றது

(8052)

| | |
|---|---|
| தமிழ் | கரன் |
| வரலாறு | R.R.ஆனந்தன் |
| | SB.Sanu |
| புவியியல் | பார்த்தீபன் |
| இந்து நாகரிகம் | துசாகரன் |
| கிறிஸ்தவ நாகரிகம் | பிருந்தாபன் |
| நாடகம் | தனுசன் |
| பொருளியல் | கபில் |
| சித்திரம் | பிருந்தன் |

Tel.No - 0772140675 Paper Class - Free

ஆரம்பம் - 30.03.2019 (சனி) பி.ப 3.00 மணி

## கணினி திருத்தம்

(C-5616)

உங்கள் வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து கணினிகள் லப்டொப்கள் திருத்தி தருகிறோம்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

**சிசிரிவி கமரா 35000/-**

4 சிசிரிவி கமரா + இணைப்புபொருட்கள் + கட்டணம் = 35000/-

**GUNA BEST PC 0779086737**

கணினிகள் சிசிரிவி கமரா விற்பனை திருத்தம் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

43 பாங்சால் வீதி சந்தை மேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்

## FALC FRENCH LANGUAGE CENTRE

## பிரெஞ்சு

(C-5872)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## கம்பர்மலை - வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்

## கூறுவிலை கோரல்

கம்பர்மலை வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வர்ணவேலைகள் (Painting) இற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**இது தொடர்பான மேலதிக விபரங்களை,**

| | |
|---|---|
| ஆ.ஞானேந்திரன் (தலைவர்) | - 077 703 3015 |
| இ.லோகநாதன் (செயலாளர்) | - 077 662 4422 |
| ச.தவச்செல்வன் (பொருளாளர்) | - 078 356 7043 |
| | or |
| | - 021 226 3302 |

(C-5916)

**ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி - 15.04.2019**

**30.03.2019** **நிர்வாக சபை**

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P No : 0776629137

## O/L பிரிவு - 1 DAY CLASS

காலை 8.00 to 2.30 வரை

ஆரம்பம் - 01.04.2019 9.00 மணி

- யாழில் O/L DAY CLASS ற்கு பிரபல்யமான புகழ்பூத்த நிறுவனம்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
- மாதாந்த பரீட்சை அலகு ரீதியாக நடாத்தப்படும்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
- இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.

(C-5903)


## மயங்கி...

ஒன்றிற்கு சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் தல்லையப்புலம் பகுதியில் பிரதான வீதியில் இருந்து உள் ஒழுங்கை ஒன்றிற்குள் இறங்க முற்பட்ட போது மோட்டார் சைக்கிளுடன் மயங்கி வீழ்ந்ததாக கூறப்பட்டது.

இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்த போது உயிரிழந்தார். கடும்வெப்ப நிலை காரணமாக மயங்கி விழுந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)


## BOC Travels (Pvt) Ltd

SUBSIDIARY OF BANK OF CEYLON

**விமான பயணச்சீட்டு கருமபீடம்**

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான

## BOC Travels (Pvt) Ltd

யாழ். மண்ணில் 10 வருடங்களுக்கு மேலாக தமது சேவையை வழங்கி வருகின்றது

**அதியுயர்**

**நம்பிக்கை | பாதுகாப்பு | உத்தரவாதம்**

### தென்னிந்திய திருத்தல யாத்திரை ஒழுங்குகள்

- 4 பேர் கொண்ட குழுக்கள் 132,000/= முதல் (ஒருவருக்கு)
- 10 பேர் கொண்ட குழுக்கள் 120,000/= முதல் (ஒருவருக்கு)

### எமது சேவைகள்

01. இந்தியா, கனடா, லண்டன், பிரான்ஸ், அமெரிக்கா, சுவிஸ், கட்டார், சவுதி மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
02. மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கான விசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்க முடியும்.
03. வெளிநாட்டில் இருந்து வரும் உங்கள் உறவினர்களின் விமானச்சீட்டுக்களுக்கு திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ள முடியும்.
04. பயணக் காப்புறுதி (Travel, Health Insurance), விசா கடிதம் (Visa Letter), தங்குமிட (Hotel) பதிவுகள் போன்றவற்றை எம்மிடம் செய்து கொள்ள முடியும்.
05. சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.
06. விடுமுறைப் பொதிகள் (Holiday Package)

(C-5912)

**இலங்கை வங்கி மேற்தரக்கிளை**

**1ம் மாடி ஆஸ்பத்திரி வீதி, (வேம்படிச் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.**

**021 222 4575, 021 222 4576, 070 384 9335, 070 395 1794**

## Techno World

(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.)

## A/L தொழில்நுட்ப பிரிவு - 2021

**புதிய பிரிவுகள் ஆரம்பம் :**

**30.03.2019 சனிக்கிழமை காலை 8.30 மணி**

### தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

**சக்தி** (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**ராகவன்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**முருகநிரோஜன்** (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)

**மதுசுதன்** (யாழ் பல்கலைக்கழகம்)

### பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

**அருண்குமார்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**ஜெகநாதன்** (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)

**சிவஜன்** (தொழில்நுட்பக்கல்லூரி)

### உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)

**திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**ஜெயந்தன்**

**பொன் சிவகுமார்**

### (ICT)

**லவன்** (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)

**உமாகாந்தன் BIT** (யா/மத்திய கல்லூரி)

| | | | |
|---|---|---|---|
| புவியியல் | கணிதம் | ஊடகக் கல்வி | வணிகக் கல்வி |
| ஜெனகன் (JHC) | தயாளன் | கோனேஸ் | தீசன் |
| விவசாய விஞ்ஞானம் | சித்திரம் | பொருளியல் | கணக்கீடு |
| சாரங்கன் | ஜெயந்தன் (JHC) | பிரதீபன் | சுகிர்தன் |

(C-5909)

**நவீன ஆய்வுகூட வசதிகளுடன் .....**

கிளைகள் : யாழ்ப்பாணம், புத்தூர் (சோமஸ்கந்தா அருகாமை)

**077 017 5346, 077 170 3549**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.